# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 323 ஐப்பசி 01 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 18 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் கைதானார்

கொழும்பு, ஒக். 18
அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி 23

## பயணிகள் சேவை நவம்பரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் இருந்து 23

# பலாலியைத் திறந்து வைத்ததைப் போன்று அரசியல் தீர்வையும் விரைந்து வழங்குங்கள்

### மைத்திரி, ரணிலிடம் மாவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 18
பலாலி பன்னாட்டு வானூர்தி நிலையத்தை திறந்து வைத்தது போன்று, அரசு தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ள அரசியல் தீர்வையும் விரைவாகப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கோரிக்கை விடுத்தார்.
யாழ்ப்பாணம் பன் 08

# யாழ்ப்பாணத்தின் வளர்ச்சியில் இனிப் புதிய புரட்சி உருவாகும்

### வானூர்தித் தளத்தை திறந்துவைத்த பின் தலைமை அமைச்சர் ரணில் நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 18
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளில் மீண்டும் அபிவிருத்தியை முன்னெடுக்கும் வகையில் பலாலி பன்னாட்டு வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது முப்பது ஆண்டுகளாகவும் போருக்குப் பின்னரும் பேசிக்கொண்டு இருந்த ஒரு விவகாரத்தை ஆறு மாத காலத்தில் நாம் முடித்துக்காட்டியுள்ளோம். இந்த வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டதன் மூலமாக யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சியில் புதிய புரட்சி ஒன்று உருவாகும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 23

## மைத்திரியை வரவேற்காத தலைமைஅமைச்சர் ரணில்

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலைய திறப்பு விழாவுக்கு நேற்று வருகை தந்த அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வரவேற்கவில்லை. இருவ 08

## பலாலியில் முதல் வானூர்தி 10.14க்குத் தரையிறங்கியது

### 28 பேர் வந்திறங்கினர்

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்திநிலையத்துக்கு, சென்னை வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்ட வானூர்தி காலை 10.14க்குத் தரையிறங்கியது. அலை 08

## இரணைமடுத்திட்டம் கைவிடப்படவில்லை

### யாழில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார் ரணில்

யாழ்ப்பாணம், ஒக். 18
வடக்குக்கான மாற்றுக்குடிதண்ணீர் திட்டம் முன்வைத்து அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரிப்பு கிடைத்துள்ள காரணத்தால் இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் 08

## 25,000 பனைவிதைகள் வவுனியாவில் நடுகை

வவுனியா, ஒக். 18
சுயாதீன இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் ஒரு இலட்சம் பனை விதைகள் வவுனியாவில்நேற்றுவிதைக்கப்பட்டன. வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியும் சுயாதீன இளைஞர் அமைப்பும் இணைந்து மேற்படி பனைவிதைகளை விதைத்தன. 23

## கோத்தாவின் கருத்தால் சர்ச்சை

கொழும்பு, ஒக். 18
போர் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன.
கோத்தபாய ராஜபக்ச பத்திரிகையாளர் 23

## கிளிநொச்சி – முல்லையில் 150 ஏக்கர் காணி விடுவிப்பு

கிளிநொச்சி, ஒக். 18
கிளிநொச்சி - முல்லைத்தீவில் படையினர் வசமுள்ள 150.15 ஏக்கர் காணிகள் இன்று விடுவிக்கப்படவுள்ளன. படையினர் வசமிருந்து விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்ட காணிகளே இவ்வாறு 04

## வவுனியா ஓட்டோச் சாரதியை பணத்துக்காகவே கொன்றேன்

### சந்தேகநபர் வாக்குமூலம் என்று பொலிஸார் தகவல்

வவுனியா, ஒக். 18
வவுனியா முச்சக்கர வண்டிச்சாரதி கொலை தொடர்பில் 24 வயதுடைய நபரொருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தான்தான் கொலையைச் செய்தேன் என்று ஏற்றுக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: 23

## தமிழ் கட்சிகளின் 13 அம்சக் கோரிக்கைகளை வேட்பாளர்கள் வாசித்துப் பார்ப்பதே தவறாம்

கொழும்பு, ஒக். 18
வடக்கில் உள்ள தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து தயாரித்துள்ள 13 அம்சக் கோரிக்கைகளை தெற்கு அரசியல் கட்சிகளோ அவற்றின் வேட்பாளர்களோ வாசித்துப் பார்க்கவேனும் உரிமையில்லை என்று தெரிவித்தார் சோபித தேரர். 04





ரூ. 2,500/- அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து சேமிப்புகளுக்கும் இலங்கையில் ஒப்பற்ற வட்டியை வழங்கும் ஒரே சேமிப்புக் கணக்கு.

DFCC சேமிப்பு

அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்குச் சென்று DFCC WINNER சேமிப்புக் கணக்கை நீங்களும் இன்றே ஆரம்பியுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.dfcc.lk

DFCC வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

see more news in
NEWUTHAYAN.COM

# அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான்?



2013ஆம் ஆண்டு வெளியான 'ராஜா ராணி' எனும் தனது முதல் படத்திலேயே முத்திரை பதித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தவர் அட்லி. இந்தப் படம் ரூ.50 கோடி வசூல் குவித்தது.

அதனைத் தொடர்ந்து விஜய் நடிப்பில் 'தெறி', 'மெர்சல்' என அடுத்தடுத்து வெற்றிப் படங்களைக் கொடுத்து, தமிழ் சினிமாவில் தவிர்க்க முடியாத இயக்குநர்கள் பட்டியலில் அங்கம் வகித்தார் அட்லி. தற்போது விஜய்யை வைத்து 'பிகில்' படத்தை இயக்கி முடித்துள்ளார். இந்தப் படம் தீபாவளிக்கு வெளியாக உள்ளது.

இந்த நிலையில், அட்லியின் அடுத்த படம் குறித்த தகவல் கசிந்துள்ளது.

அதன்படி, அட்லி-ஷாருக்கானை வைத்து படம் இயக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு வருகிற டிசெம்பர் மாதம் தொடங்க உள்ளதாகவும், தமிழ், இந்தி மொழிகளில் தயாராக உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி ராசையா விஜயலக்ஷ்மி

காரைநகர் புதுறோட்டை பிறப்பிடமாகவும் மாப்பாணர் வூரியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ராசையா விஜயலக்ஷ்மி நேற்று (17.10.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசையா இரத்தினம் தம்பதிகளின் புதல்வியும் நடராசா, Dr. கன்னுத்துரை இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2019) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
031 222 3603 தம்பி - நடராஜா (நீர்கொழும்பு)



### சவிரிமுத்து சேவியர்தாஸ்

(முன்னாள் இ.போ.ச சாரதி)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து சேவியர் தாஸ் 17.10.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னரின் இறுதிநிகழ்வுகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

310, பருத்தித்துறை வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - 077 759 1400

## மரண அறிவித்தல்

### திருமதி காயத்ரிதேவி ஜெயரட்ணம்



யாழ் வடலியடைப்பை பிறப்பிடமாகவும் 12 வருடம் கனடாவில் பிரஜாவுரிமையுடையவரும் தற்போது வவுனியா வைரவப்புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காயத்ரி தேவி ஜெயரட்ணம் கடந்த 16.10.2019 புதன்கிழமை வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சண்முகநாதன் அன்னலக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தங்கமுத்து - முத்தையா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜெயரத்தினத்தின் அன்பு மனைவியும் வாகீசன் (லண்டன்). பகீரதி (கனடா). பாரதி (கொழும்பு) ஆரூரன் (சட்டத் தரணி-வவுனியா). மகாரதி (கனடா). விஜயரதி (நீர் கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயத்தினி (லண்டன்) ஜெயகாந்தன் (கனடா). சுரேஸ்காந்தா (கொழும்பு) துஷியந்தினி (ஆசிரியை - விபுலானந்தா கல்லூரி - வவுனியா). உதயசேகரம் (கனடா). வரதன் (வைத்தியர் - நீர்கொழும்பு). ஆகியோரின் அன்பு மாமியாரும் ஷமீகா. விசாகன். ஜெசிக்கா. பெபேக்கா. துஷானி. துஷாரிக்கா. துஷாங்கி. யதுஷன். ஹரணி. விபுஷன். லாரணி. கவிஷனா. ஹரோஷன். அபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற வத்சலாதேவி மற்றும் ஶ்ரீகாந்தபதி (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா). ஶ்ரீரங்கபதி (பொறியியலாளர் - கனடா). உஷாதேவி. சிந்தாதேவி. கௌவுலாதேவி. ஶ்ரீவாபதி ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,சகோதரர்கள்
ஜெ.ஆரூரன் - (சட்டத்தரணி) 077 344 9675
ஆ.துஷியந்தினி (ஆசிரியை)

வைரவப்புளியங்குளம்
வவுனியா.

## மரண அறிவித்தல்

# பொன்னையா பத்மநாதன்

### (ஓய்வு பெற்ற அதிபர்– யாழ்/ கொக்குவில் நாமகள் வித்தியாலயம்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06.02.1950 | 17.10.2019 |

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட **பொன்னையா பத்மநாதன்** நேற்று **(17.10.2019)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பர்னாந்து விக்டோறியா தம்பதிகளின் அன்பு மருமகனும் தேக்கிளா சுசிலாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-யாழ்/ கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயம், யாழ்/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும் பத்மராஜா (Swiss), பத்மகாந்த் (நில அளவையாளர் NEM), பத்மானந்த் (Canada), பத்மதனுஷாந்த் (சட்ட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மிலோத்தி மற்றும் சாமிளா, டனோசனா (உதவிப் பதிவாளர் வவுனியா வளாகம்- யாழ் பல்கலைக்கழகம்), அனுசியா (Canada), ஷாளினி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசரத்தினம், சதானந்தன் காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரரும் அக்னேஸ், இஸ்ரெல்லா, லெனாட் காலஞ்சென்றவர்களான லியோன், எட்மன்ட் மற்றும் பற்றிமா, பர்னாந்து புளோரன்ஸ் (ஆசிரியர்- புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கோபிநாத் (புனித பரியோவான் கல்லூரி தரம் - 6E ), ஆதர்சனன், ருஸ்விதா, நிகேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெசவுசாலை ஒழுங்கை, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:- குடும்பத்தினர்.
077 603 2164, 077 231 3185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா நாட்டுக்கே அதிபராக இருந்தாலும் மகளின் அதிகாரத்துக்கு அடிமை தான்



# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
இந்துக்கற்கைகள் பீடத்தின் சிரேஷ்ட
விரிவுரையாளராகக் கடமையற்றும்
**சயனொளிபவன் முகுந்தன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**செல்லத்துரை சயனொளிபவன்**

அவர்கள் 17.10.2019 அன்று இறைபதமெய்தியுள்ளமையை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**பீடாதிபதி, துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், இந்துக்கற்கைகள்பீடம், யாழ் பல்கலைக்கழகம்**

# மரண அறிவித்தல்

## கதிரவேலு விநாயகமூர்த்தி (சேனாதிபதி)



தோற்றம் 12.07.1943 மறைவு 17.10.2019

சாவகச்சேரி வீதி வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு விநாயகமூர்த்தி நேற்று (17.10.2019) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சரஸ்வதி தம்பதிகளின் மூத்தமகனும் காலஞ்சென்ற இராசையா பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் திருப்தியம்மாவின் பாசமிகு கணவரும் கணேசமூர்த்தி, பரமேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2019) வெள்ளிக்கிழமை வெள்ளாம்போக்கட்டி கொடிகாமத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாள்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம் தகவல்:குடும்பத்தினர் 077 365 6907**

# சூரியனும் தண்ணீரும்!

முன்னொருகாலத்தில், சூரியனும், தண்ணீரும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தனா. சூரியன், அடிக்கடி தன் நண்பரான தண்ணீரைப் போய் பார்த்து வந்தது. ஆனால், தண்ணீர், சூரியனின் வீட்டுக்குச் சென்று பார்ப்பது கிடையாது. இது சூரியனுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது.

ஒருநாள் தண்ணீரிடம், "நான் மட்டும் அடிக்கடி உன் வீட்டிற்கு வருகிறேன். ஆனால், நீ ஏன் ஒரு முறை கூட என் வீட்டிற்கு வருவதில்லை" என்றது சூரியன்.

"சூரியனே! உன் வீடு பெரியதாக இல்லை. என் உறவினர்கள் அனைவரையும் அழைத்து வந்து, அங்கு தங்க வைக்க முடியாது. நான் உறவினர்களோடு வந்தால், நீங்கள் வெளியில் போக வேண்டியதாகிவிடும். அதனால் தான் வருவதில்லை," என்று கூறியது.

இதை கேட்டதும், சூரியனின் முகம் மாறியது. அது, தண்ணீரை குழப்பத்துடன் பார்த்தது.

மீண்டும் தண்ணீர், "நான் உன்னைப் பார்க்க வருகிறேன். ஆனால், அதற்கென நீ ஒரு பெரிய வீட்டை கட்ட வேண்டும். அந்த வீட்டிற்கு என் சொந்தங்கள் அனைவரையும் அழைத்து வருகிறேன்.

"உறவினர்கள் எல்லாரும் ஒன்றாக வருவதால், அறைகள் அனைத்துமே நிரம்பி விடும். அதற்கேற்ப மிகப் பெரிய வீடாகக் கட்ட வேண்டும்," என்று சொன்னது.

அவ்வாறே செய்வதாக, சூரியனும் உறுதி அளித்தது. பின், வீட்டுக்குச் சென்று, மனைவி நிலாவிடம், வீடு கட்டும் திட்டத்தை தெரிவித்தது. ஒரு பெரிய புன்னகையுடன் அதற்கு சம்மதம் தெரிவித்தது நிலா. சூரியன் வீடு கட்டும் வேலையை முடித்து, தண்ணீரை தன் வீட்டுக்கு அழைத்தது.

சூரியனின் புதிய வீட்டை நோக்கி வந்தது தண்ணீர். அப்போது, சூரியனின் உறவினர் ஒருவர், "தண்ணீர் வீட்டிற்குள் வந்தால், தாங்காது; அதை வீட்டிற்கு அழைப்பது பாதுகாப்பானதில்லை. இது குறித்து யோசிக்க வேண்டாமா?" என்று சொன்னது.

"ஒரு நண்பனை வீட்டுக்கு அழைப்பதால், என்ன பாதுகாப்பின்மை வந்துவிடும். தண்ணீர் என் நண்பன்; அதனால் அழைத்துள்ளேன்," என, அவர் வாயை அடைத்தது சூரியன்.



தண்ணீர், சூரியனின் வீட்டுக்குள் வந்தது. அதனுடன் மீன்களும், கடல் வாழ் உயிரினங்களும் வந்தன. விரைவில் வீடெங்கும் முழங்கால் அளவு தண்ணீர் நிரம்பியது.

அப்போது தண்ணீர், "இப்போது சொல் சூரியனே போதுமா இன்னும் அதிக உறவினர்களுடன் நான் வர வேண்டுமா?" என்று கேட்டது.

"இன்னும் அதிக உறவுகளோடு, உள்ளே வாருங்கள்," என்று அழைத்தது சூரியன்.

உடனடியாக தண்ணீர் வீடெங்கும் நுழைந்தது. அது இடுப்பளவு வந்தவுடன், "போதுமா இன்னும் வரவேண்டுமா?" என்று கேட்டது.

"மேலும் உறவுகளோடு வருக," என்றது சூரியன். தண்ணீர் தலையை மூழ்கடிக்கும் நிலையை எட்டியது. அப்போதும் சூரியனும், நிலாவும், 'இன்னும் அதிக உறவினர்களோடு வாருங்கள்!' என்றன.

தண்ணீர் வீட்டின் கூரையை தொட்டது. நிலாவோடு, சூரியன் கூரைக்கு மேல் போய் அமர்ந்தது.

அப்போதும், "போதுமா இன்னும் என் உறவினர்களும், நண்பர்களும் வர வேண்டுமா?" என்றது தண்ணீர்.

அதற்கும் சூரியனும், நிலாவும், "இன்னும் வரட்டும்." என்றன.

தண்ணீர் மேலும் வந்து, வீட்டை மூழ்கடித்து உயர்ந்தது. அப்போது தான் உண்மை நிலையை உணர்ந்த நிலாவும், சூரியனும் வானத்தில் போய் ஒட்டிக் கொண்டன. இன்று வரை அங்கேயே இருக்கின்றன.

# நினைவஞ்சலி



அமரர்

## செல்லையா செல்வராசா

தோற்றம் 28.01.1950

மறைவு 23.05.2019

இறைவன் தந்த வாழ்வுதனை
இன்பமுடன் ஏற்று
இல்லங்கள் பல சென்று
இச்சையுடன் பணிபுரிந்து
இன்னல்கள் பல சுமந்த உம் வாழ்வில்
இன்முகத்துடன் வாழ – நான்
இருகரம் நீட்டி இணைத்தது
பேரன் பேர்த்தியினை தொட்டிலிட்டு சீராட்டியது

இனிய நினைவுகளாய் உம் மனதில்
தோன்றாதது ஏனோ?
இருளது நீங்கி ஒளிவீசும் வேளைதனில்
இனியாரும் இல்லையென ஏங்கி
என் முகம் காணாது இறையடி சேர்த்தது ஏனோ?
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
**மகன் செல்வராசா செல்வகுமார்**
**மருமகள் செ.அனந்தினி**
**பேரப்பிள்ளைகள் செ.திஜன் , செ. பரணிகா**

**கிராம்புவில் மேற்கு, கல்வயல்**

(IN/11494)(11.17)

**மகன் செ.செல்வகுமார்.**

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி சிவபாதம்

அல்வாயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவபாதம் நேற்று (17.10.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற வயிரமுத்து தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கோணாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற சிவபாதத்தின் மனைவியும் சற்குணராஜா, குணாளன், பிரபாகரன், சுகந்தா, பிரதீபன், சுஜாத்தா, சுகிந்தா ஆகியோரின் அன்புத்தாயும் நந்தினி, வசந்தினி, சுகுணதாசன், திருமதி பிரதீபன், சதீஸ்கரன், யெகசுதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஹரிணி, நிலக்ஸினி . பிரவீன், பிரஹவீன், துளசிகன், விஸ்ணுஜா, ஹரிசிகன், அலைனா ஸஹஸ்ரா, ப்ரம்மிகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2019) வெள்ளிக் கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல்: மகள் - திருமதி சுகந்தா சுகுணதாசன்**
**077 [illegible]930, 077 132 6489, 021 222 6304**
**விஷ்ணுகா பந்தல் சேவை**
**இல.335 நாவலர்வீதி, அரியாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NOTICE
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**WALK – IN - INTERVIEW**

POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01 VACANCY

POST OF PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 02 VACANCIES

**Walk in Interview for the above positions - On Contract Basis** will be held on 25.10.2019 from 9.00 AM to 11.00 AM , at the Mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

For further details please refer the University of Jaffna website www.jfn.ac.lk.

**Registrar**


தானாக உயரும் - **வயது**
விடாமல் துரத்தும் - **காலம்**
தடுக்க முடியாத- **நேரம்**
கடக்கத் துடிக்கும்- **இளமை**
காலைத் தடுக்கும்- **சமூகம்**
தொடவேண்டிய - **இலக்கு**
இத்தனை போராட்டம் தான்
**வாழ்க்கை**

## கிளிநொச்சி...

இன்று கையளிக்கப்படவுள்ளன.

படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பது தொடர்பில் பல்வேறு கூட்டங்கள் இடம்பெற்றன. இந்த நிலையில் அண்மையில் ஒரு பகுதி காணிகள் விடுவிக்கப்பட்டபோது, மேலும் சில காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவை விடுவிக்கப்பட ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் கிளிநொச்சி இராணுவ தலைமை கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய தெரிவித்திருந்தார். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாகவே இந்தக் காணிகள் இன்று விடுவிக்கப்படவுள்ளன. (ம)

## தமிழ்...

13 அம்சக் கோரிக்கைகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலுள்ள தமிழ் கட்சிகள் ஐந்து ஒன்றிணைந்து 13 அம்சக் கோரிக்கைகளைத் தயாரித்துள்ளன. இந்த நாட்டிலுள்ள எந்தவொரு கட்சியினதும் இந்த அடிப்படைவாத, பயங்கரவாத, பிரிவினைவாத சிந்தனைக்கு ஆதரவு வழங்க முடியாது. குறைந்த பட்சம் இந்தக் கோரிக்கைகளை கையில் எடுத்து வாசிப்பதற்காகவாவது எந்தவொரு வேட்பாளருக்கும் உரிமை கிடையாது - என்றார். (ம-227)


ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 17.10.2019 | 2650 | கபிலம் |

துலாம்
வெற்றி இலக்கங்கள் 24 42 50 56
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 153, 666/=
18.10.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கருநீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 764
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,329,340/-
வெற்றி இலக்கங்கள் 06 14 39 71 D
விசேட வெற்றி இல. 6009

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1613
சீட்டிழுப்பு திகதி 17.10.2019
வெற்றி இலக்கங்கள் 02 22 25 27 A
அடுத்த செவ்வாய்கிழமைக்கான ஜக்பொட் ரூ.39, 424, 616/=
தொ.பே. 011 4952602 / 0114052062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ES Printers
Pen Printing
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472



### புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் ஆலயத்தின்
# புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2019



ஈழத்திருநாட்டில் கோண்டாவில் மேற்கு செங்கற்பனை என்னும் திருப்பதியில் அற்புதங்கள் பல நிகழ்த்தி அருமருந்தாம் திருமருந்தால் கொடு நோய்கள் நீக்கி, அருள்பலவும் புரிந்து அனைவரையும் காத்ததிருமகளாம் பார்வதித்தாய் உருவாக்கிக் கொடுத்த புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் ஆலயத்தின் விநாயகர், சிவலிங்கம், அம்பாள், நடேஸ்வரர், தட்சணாமூர்த்தி, முருகப்பெருமான், சந்தானகோபாலர், துர்க்கை அம்மன், நவக்கிரக தேவர்கள், பைரவர், நந்தியெம்பெருமான் ஆகிய தெய்வங்களுக்குப் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழ இறையருள் பாலித்துள்ளது.

## காலம்: 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை

நிகழும் மங்களகரமான விகாரி வருஷம் ஐப்பசிமாதம் 3 ஆம் நாள் (20.10.2019) ஞாயிற்றுக் கிழமையும் திருவாதிரை நட்சத்திரமும் சப்தமி திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 07.00 மணிமுதல் 09.27 மணிவரையுள்ள தனுலக்ன சுபநேரத்தில் எம்பெருமாட்டி புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் என்கின்ற குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அடியார்கள் அனைவரும் இவ்வபிஷேகத்திற்கு முன்னர் நடைபெறும் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற விசேட பூசைகளிலும் கலந்துகொண்டு எம்பெருமானின் அருள் பெற்றுப் பெருவாழ்வு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

## கிரியைகள் விவரம்

**★ ஐப்பசி மாதம் 1 ஆம் திகதி 18.10.2019 வெள்ளிக்கிழமை**

காலை 06.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஹோமங்கள் பூசைகள் நடைபெற்று பிரசாதம் வழங்கல்.
மலை 05.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று 06.00 மணி முதல் 07.20 மணிவரையும் ஸ்தூபி, தீப, யந்திர, பிம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நடைபெற்று தொடர்ந்து யாகபூசைகள், ஹோமம் நடைபெற்று பூசை வழிபாட்டுடன் பிரசாதம் வழங்கல்.

**★ ஐப்பசி மாதம் 2 ஆம் திகதி 19.10.2019 சனிக்கிழமை**

காலை 07.00 மணியிருந்து விநாயகர் வழிபாட்டுடன்தொடர்ந்து யாக பூசை, ஹோமம் பூசைவழிபாடு தைலாப்பங்கம் (எண்ணெய்க்காப்பு).
இதனைத் தொடர்ந்து அடியார்களால் காலை 09.00 மணிமுதல் மாலை 04.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.
மாலை 05.00 மணியிலிருந்து யாகபூசை, திரவ்யஹோமம், ஸ்பர்ஷாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, வேதபாராயணம், தேவாரபாராயணம், பிரசாதம் வழங்கல்

**★ ஐப்பசி மாதம் 3 ஆம் நாள் 20.10.2019 ஞாயிற்றுக்கிழமை**

காலை 07.00 மணிக்கு கிரியைகள் யாகபூசை, ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனையைத் தொடர்ந்து கும்பங்கள் வீதிப் பிரதட்சணம்.
காலை 07.00 முதல் 09.20 வரையுள் ஸ்தூபி அபிஷேகம்.மஹா கும்பாபிஷேகம், தசதர்சனம் (கண்ணாடிபார்த்தல்), எஜமான அபிஷேகம், பிரசாதம் வழங்கல்.
மாலை புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வர பரிவார மூர்த்திகள் வீதி உலா நடைபெறும்.

**★ மஹா கும்பாபிஷேகம் குரு**

பிரம்ம ஸ்ரீ ச. சிறீஸ்கந்தராஜாக் குருக்கள் தலைமையில் மற்றும் பல சிவாச்சரியார்கள் கலந்துகெள்ளவார்கள்.
இப்புண்ணிய வேளையைத் தவறவிடாது அடியார்கள் வந்து வணங்கி அருள்பெறுவதுடன் மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய நிர்வாகம்
அதிபதீஸ்வரன் ஆலயம், பழைய அம்மன் கோவிலடி, ... கோண்டாவில்.

(cs 28753)(13)



## பணிப்பெண் தேவை

யாழ் நகரிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
**தொடர்புகளுக்கு:- 076 564 6282**

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **Toyota Hiace** வாகனம் விற்பனைக்கு உண்டு
**தொடர்பு: 077 103 8912**

## மணமகள் தேவை

யாழ். இந்து 27 வயது 8 ல் செவ்வாய் 53 பாவம் **Master Degree (Pera)** பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகனுக்கு **Canada, Australia, Newzeland, PR** உள்ள மணமகள் தேவை.
**076 965 8350**

MAJESTIC CINEPLEX




மேலதிக விபரங்கள் தொடர்புகளுக்கு அழையுங்கள்
011 5 999 999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சபாரத்தினம் லதீஸ்குமார்**

கிளி/ கிராஞ்சி அ.த.க பாடசாலையின் அதிபரும் சிறந்த சமூக சேவையாளருமான **திரு சபாரத்தினம் லதீஸ்குமார்** அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலை சமூகம்
கிளி/ கிராஞ்சி அ.த.க பாடசாலை

CS28764(16/17)

## வீடு வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் வீடு (அனெக்ஸ்) வாடகைக்குண்டு.

**077 112 0314** (CS/28752) (11,17)

## 3G/4G IP TELEPHONE FREE OFFER

**SLT CityLink CDMA** வாடிக்கையாளர்களுக்கு புதிய **IP** தொலைபேசி இலவச இணைப்பு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

071 090 2355 - 077 661 7318 - 021 221 6393

## மேற்பார்வையாளர் தேவை

அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்தில் தங்கி நின்று வேலை செய்ய அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை. வயதெல்லை - 30 - 45 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்.

**021 222 8490, 021 721 0910** (CS/2834) (1/17)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

## அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம். பொதுக்கூட்ட அறிவித்தல்

20.10.2019 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி விஸ்வேஸ்வரி மணி மண்டபத்தில் தலைவர் திரு. தி. கிருஸ்ணகுமார் தலைமையில் பொதுக்கூட்டம் இடம்பெற்று புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளது.

விஸ்வ குலத்தைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் ஆயுள் அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அ/இ/ விஸ்வகர்மகுல சங்கம்.
213/1,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஜெ. மனோகர்
கௌரவ செயலாளர்
077 236 7494

## பணியாளர்கள் தேவை

**சிவகுரு ஹாட்வெயார், கரடிப்போக்கு, கிளிநொச்சி நிறுவனத்திற்கு கீழ்க் குறிப்பிடுவோர் தேவை.**

1) மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்

2) கணக்காளர்
3) கணக்காய்வாளர்
(844)

கணினியில் போதிய அறிவும் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**0777722305**

## துணுக்காய் பிரதேசசபை
## 2020 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

துணுக்காய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தை,ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிகடைகள் என்பவற்றை 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | :- 18.10.2019 - 04.11.2019 (அலுவலக நாட்களில் மு.ப. 8.30 – பி.ப. 3.00) |
| கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி | :- 04.11.2019 பி.ப 12.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | :- 05.11.2019 பி.ப 01.00 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | :- 05.11.2019 பி.ப 2.00 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | :- துணுக்காய் பிரதேசசபை அலுவலகம் |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய் என்றமுகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லதுஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்துக்குமுன் இடப்படல் வேண்டும். இரண்டாவதுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இறைச்சிக்கடை

| இல | குத்தகைவகை | இடம் | ஆகக்குறைந்தகேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 25,476.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை | துணுக்காய் | 308,935.00 | 2,500.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 25,740.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 63,250.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை | மல்லாவி | 2,030,380.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 801,240.00 | 1,500.00 | 500.00 |
| 07 | ஆட்டிறைச்சிக்கடை | ஐயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500.00 |
| 08 | மாட்டிறைச்சிக் கடை | ஐயன்கன்குளம் | 149,930.00 | 2,500.00 | 500.00 |
| 09 | கோழி இறைச்சிக்கடை | ஐயன்கன்குளம் | 15,378.00 | 1,500.00 | 500.00 |

பொதுச்சந்தை

| இல | குத்தகைவகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்படமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | துணுக்காய் பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 29,700.00 | 1,500.00 | 500.00 |
| 02 | ஐயன்கன்குளம் பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலையமும் | ஐயன்கன்குளம் | 29,282.00 | 1,500.00 | 500.00 |
| 03 | மல்லாவி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலையமும | மல்லாவி | 1,763,850.00 | 1.500.00 | 500.00 |

நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் இலங்கைபிரஜையாகவும் தமதுஆள் அடையாளத்தை நிரூபிக்கக் கூடியவராகவும் சான்றுகள் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்வி கோர தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வி தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
4. வியாபாரஉத்தரவுக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்.
5. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
6. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்படவேண்டும்.
7. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்படமுன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ளவேண்டும்.
8. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
9. சித்தியடையும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வாரகாலத்திற்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**திரு.அ.அமிர்தலிங்கம்**
**தவிசாளர்,**
**பிரதேசசபை,துணுக்காய்.**

மார்ச் 2020 வங்கியியல் பரீட்சைக்கான IABF மற்றும் DABFக்கான வகுப்புக்கள் 20ம் திகதி ஒக்டோபர் 2019இல் ஆரம்பம்

INSTITUTE OF BANKERS OF SRI LANKA

**வங்கித்துறையில் உங்கள் எதிர்காலத்தினை அமைத்திட எண்ணுகின்றீர்களா அவ்வாறு எனில் தொழில்சார் கற்கைநெறியில் முன்னணி நிறுவனமாகிய எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்**

- வங்கியியல் பாடநெறியை கற்பிப்பதில் நீண்டகால அனுபவம் கொண்ட முன்னணி விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படும்.
- அச்சிடப்பட்ட குறிப்புகளுடன் கடந்த வருட பரீட்சைக்கான வினாத்தாள்களும் வழங்கப்படும்.
- வகுப்புகள் வார/ வார இறுதி நாட்களில் மாணவர்களின் வசதிற்கேற்ப ஒழுங்கு செய்யப்படும்.
- இலகுவாக அடையக்கூடிய இடத்தில் சிறந்த வகுப்பறைகளில் வகுப்புகள் நடாத்தப்படும்.
- பாடவிதானத்தின் இறுதியில் மீட்டல் கருத்தரங்கு நடாத்தப்படும்.

**INSTITUTE OF BUSINESS MANAGEMENT**
No.1, 2nd Lane,Power House Road, Jaffna
Tel : 0777071601/ 0777633915/ 0212227770

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

**சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்**



புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தை சேர்ந்த

**வேலுப்பிள்ளை பரமலிங்கம்**

கடந்த 04.10.2019 அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஓய்வுபெற்ற கிராம சேவகரும், முன்னாள் கந்தசாமி கோயில் தலைவரும், தற்போதைய போசகரும், புதுக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலய உப தலைவரும், புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்தியசாலை நிர்வாக உறுப்பினரும் ஆவார்.

இவர் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமைக்கு வாழ்த்தி நிற்கின்றோம். (10)

**புதுக்குடியிருப்பு. குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பிரதேச செயலக ஓய்வூதிய உத்தியோகத்தர் திருமதி **ஜெயமாலா திருத்தணிகைநாதன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா கிருஷ்ணபிள்ளை**

அவர்கள் 16.10.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (10)

**நலன்புரிச் சங்கம்,**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9ஆவது பிறந்தநாள் வாழ்த்து



சிவறாஜகுமார் மதிவதனி தம்பதிகளின்
செல்வப் புதல்வர்களான

**சி.சிவடனுஷன்,**
**சி.சிவடனுஷிகன்**

தங்கள் பிறந்தநாளை தமது இல்லத்தில்
இன்று (18.10.2019) வெள்ளிக்கிழமை
கொண்டாடுகிறார்கள்.
இவர்களை அப்பா, அம்மா, பெரியப்பா,
பெரியம்மா, பெரியத்தை, அத்தை மாமா, வசந்தா
அத்தை, கனடா பெரியப்பா, கனடா பெரியண்ணா,
கனடா சின்னண்ணா, கனடா அக்கா, ஆசை
அத்தை, மேனகா அத்தை, தண்ணிமாமா,
சித்தா, குட்டி அத்தை, குட்டி மாமா ஆகியோர்
சகல செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.

'சிவபதி'
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**சித்தா குடும்பம்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

செல்வி
**ஜெயந்திரன் யாதவி**
(தேசியத்தின் தங்கப்பதக்கம்)



Congratulations

செல்வன்
**செந்தூரசர்மா சிந்துஜசர்மா**
(தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 167)

தென்மராட்சி யா/ மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத்தின் மாணவி **செல்வி ஜெயந்திரன் யாதவி** அவர்கள் தேசிய பாடசாலை மட்ட 17 வயதுப் பிரிவு பளுதூக்கல் போட்டியிலே 87 வருட பாடசாலை வரலாற்றில் முதற்றடவையாக தங்கப்பதக்கம் பெற்றமையையும், **செல்வன் செந்தூரசர்மா சிந்துஜசர்மா** அவர்கள் தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகள் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **பாடசாலை சமூகம்,**
**யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்.**

(AVA/236)(11,17)


# நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்

## பாதுகாப்புச் சேவை, சுத்திகரிப்புச் சேவை தொடர்பான கேள்வி கோரல் 2019/2020

1) வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுத் தலைவர் (DPC- Major) அவர்களால் தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்களிடமிருந்து பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

Bid No. NP/05/02/PROC/SEC/2019
(பாதுகாப்புச்சேவை)

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை பகல் / இரவு |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 21 |
| 2 | கிளிநொச்சி | 04 |
| 3 | முல்லைத்தீவு | 06 |
| 4 | மன்னார் | 04 |
| 5 | வவுனியா | 06 |
| | மொத்தம் | **41** |

Bid No. NP/05/02/PROC/CLE/2019
(சுத்திகரிப்புச்சேவை)

| தொ. இல | மாவட்டம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 14 |
| 2 | கிளிநொச்சி | 03 |
| 3 | முல்லைத்தீவு | 03 |
| 4 | மன்னார் | 03 |
| 5 | வவுனியா | 04 |
| | மொத்தம் | **27** |

2) கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

3) ஒப்பந்தம் அளிப்பிற்கு தகுதி பெற்றுக்கொள்வதற்கு கேள்வி கோரலில் வெற்றிபெற்ற விலைக் கேள்விதாரர்கள் கறுப்புபட்டியலில் இடம்பெறாமல் இருப்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

அ. கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்
ஆ. பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்
இ. கேள்விதாரரின் பதிவுக்காரியாலயம் அல்லது கிளை அலுவலகம் வடமாகாணத்தில் அமையப்பெற்றிருத்தல் வேண்டும்.

4) ஒப்பந்த அளிப்பினை பெற்றுக்கொள்வதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விப்பத்திரதாரர் அடிப்படைத் தகுதியினை விலைக்கேள்வித் தரவு பிரிவு – 02 இன் பிரகாரம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5) தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களையும், விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கண்டி வீதி, கைதடி எனும் முகவரியில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாண அலுவலகத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

6) தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினைச் சமர்ப்பித்து அலுவலக நாள்களில் 18.10.2019 ஆம் திகதி தொடக்கம் 31.10.2019 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப.15.00 மணிவரை வடமாகாண நிதி, திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விலைக் கேள்விப்பத்திரத்திற்கும் மீளளிக்கப்படமுடியாத கேள்வி வைப்புப் பணத்தினை பின்வரும் அடிப்படையில் காசாக செலுத்தி விலைக்கேள்வி பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படமுடியாத கட்டணம் |
|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 4,000.00 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 2,000.00 |

7) விலைக்கேள்விப் பத்திரங்கள் 31.10.2019ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்பதாக இவ்வமைச்சில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய விலைக்கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

8) கேள்விப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு விலைக்கேள்விதாரரால் விலைக்கேள்விப் பிணைப் பொறுப்பு பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விபரம் | தொகை ரூபா. | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்புச் சேவை | 163 ,000.00 | 31.10.2019 - 30.01.2020 |
| 2. | சுத்திகரிப்புச் சேவை | 83,000.00 | 31.10.2019 - 30.01.2020 |

**பெயர்** : **திருமதி ச. மோகநாதன்**
**பதவி** : **செயலாளர், நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வடமாகாணம்.**
**விலாசம்** : **நிதி திட்டமிடல் மற்றும் உள்ளூராட்சி [illegible]**
**தொலைபேசி : 021-2216115**
**தொலைநகல்: 021-2057120**

(in.11489) (13)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வனஜா -**
**அருள் உதயன்**
தம்பதியினரின்
செல்வப் புதல்வியும்
கொழும்பு - வெள்ளவத்தை
சைவமங்கையர்
வித்தியாலய மாணவியும்
தற்போது யாழ்.உடுவில்
மகளிர் கல்லூரி
மாணவியுமான

**தாமராஅபி**

(cs 28756)

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் **175 புள்ளி** பெற்று திறமைச் சித்தியடைய காரணமாக இருந்த அனைவரையும் மனதாரப் பாராட்டுவதுடன் என் தங்கை மேன்மேலும் கல்வி, வாழ்க்கைப் பரீட்சையிலும் சித்தி பெற்று என்றும் வெற்றியான நல்வாழ்வு வாழ என்றும் விநாயகர், முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அக்கா- நித்தியகல்யாணி, ஐங்கரா, வேலவா

# தேசிய லொத்தர் சபை

**விசேட சீட்டிழுப்பு:** செவன (227) - 15.10.2019
**முகவர்:** சிவசேகரம் கிரிஷாந் (N 220048)
**இடம்** : அச்சுவேலி
**பரிசு:** மோட்டார் சைக்கிள் (பெண்)
**விற்பனை நிலையங்கள் அச்சுவேலி, நிலாவரை, கோப்பாய்**
மோட்டார் சைக்கிள் வெல்லப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் மேலும் வெற்றிவாய்ப்புகளை அறிந்துகொள்ள எமது ரிக்கட்டுக்களை கேட்டு வாங்குங்கள்.



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
**26.10.1948**



**மறைவு**
**18.10.2016**

**புலேந்திரன் செல்வமணி** (செல்லக்கண்டு)
**திதி: சதுர்த்தி**

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே!
எம்மை [illegible] ஆழ்த்தி எம்மைவிட்டு சென்றதேனோ!
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
கவலையுடன் தேடுகின்றோம்
இறையடி தொண்டு செய்தால் தானோ....!
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு
தாயே! நீங்கள் இல்லை.....!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs 28757 -13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வட மாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2020ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக தேசிய ரீதியிலான பெறுகைகளின்போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப் படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர் களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

| தொகுதி இல: "G" | |
|---|---|
| உப தொகுதி இல. | பொருள்கள் - விவரம் |
| G-1 | அலுவலக தளபாடங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் |
| G-3 | காகிதாதிகள் |
| G-4 | ரோணர்கள் (Toners), ரிபன்கள் (Ribbion) |
| G-5 | கட்டடப் பொருட்களும் கட்டடப் பிரிவிடுதலும் ( partioning) அலங்காரமும் |
| G-6 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-7 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-8 | அச்சிடும் பொருள்கள் |
| G-9 | கணனிகளும் உதிரிப்பாகங்களும் |
| G-10 | சமூக நலன் பொருள்கள் |
| G-11 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், மோட்டார் வாகனங்களுக்கான பற்றிகள் |
| G-12 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருள்களும் |
| G-13 | கல்விசார் உபகரணங்கள் |
| G-14 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-15 | இசைக் கருவிகள் |
| G-16 | வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் |
| G-17 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் |
| G-18 | சுத்திகரிப்பு பொருள்களும் உபகரணங்களும் |
| G-19 | ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருள்களும் |
| G-20 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-21 | வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவும் குளிர்பானமும், சிற்றுண்டி, பேக்கரி உணவு பொருள்கள் |
| G-22 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-23 | விவசாய பொருள்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்கள் |
| G-24 | விவசாய விதைகள், நடுகைப் பொருள்கள் |
| G-25 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருள்கள் |
| G-26 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-27 | மீன்பிடி தொடர்பான பொருள்கள் |
| G-28 | கைத்தொழில் மூலப்பொருள்கள் |
| G-29 | இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள் |
| G-30 | வாகனங்களிற்கான ரயர் மற்றும் ரியூப் |
| G-31 | வைத்தியசாலைக்கான துணிகள் வழங்கல் |
| G-32 | பாதணிகள் |
| G-33 | தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| G-34 | இரும்பு பொருட்சாதனங்கள் |
| G-35 | வைத்தியசாலை வாயு வழங்கல் (Medical gas) |
| G-36 | வைத்தியசாலை ஆய்வுகூட இரசாயனங்களும் மீள் நிரப்பல்களும் (Regrets) |
| G-37 | வைத்தியசாலை தளபாடங்கள் |
| G-38 | வைத்தியசாலைகளுக்கான ஆடைப்பொருள்களும் மற்றும் சுகாதார தொற்று நீக்கிய துண்டுகளும் |
| G-39 | பல் வைத்திய உபகரணங்கள் |
| G-40 | மருத்துவ உபகரணங்கள் |
| G-41 | ஒலி ஒளி உபகரணங்கள் |
| G-42 | மகாநாடு மற்றும் கூட்டங்களுக்கான உணவு வழங்கல் |

| தொகுதி இல: "S" | |
|---|---|
| உப தொகுதி இல | சேவைகள் - விபரம் |
| S-1 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை திகதி முத்திரை தயாரித்தல். |
| S -2 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S -3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், றோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-4 | கணனிகள், பிறிண்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | குளிருட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-8 a or b | **அ) வாகனம் பழுது பார்த்தல்:- உள்வாரியான திருத்தங்கள்** இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள் **ஆ) வாகனம் பழுது பார்த்தல்:- வெளிவாரியான திருத்தங்கள்** தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும் பெயின்ட் அடித்தலும், |
| S-9 | வாகனம் பராமரித்தல்: கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல்/வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் (Passenger Vehicle) |
| S-12 | வாகனங்களுக்கு டயர் மாற்றம் செய்தல், காற்று நிரப்புதல், டயர் ரியூப் ஒட்டுதல். |
| S-13 | மர வேலைகள் திருத்தம் (சிறு திருத்தங்கள் ) |
| S-14 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| S-15 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு (Video and Audio Recording) |
| S-16 | புகைப்படப்பிடிப்பு |
| S-17 | தொலைபேசி உபகரண பழுதுபார்த்தல் |
| S-18 | நிலமட்டப்படுத்தல் சேவைகள் |
| S-19 | குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் வாகனங்களுக்கும் தளபாடங்களுக்கும்(upholstery works of furniture and vehicles) |
| S-20 | கனரக வாகனங்கள் வாடகைக்கு வழங்கல் |
| S-21 | குழாய் பொருத்துனர் சேவையும் நீர் வழங்கல் சேவையும் |
| S-22 | கணினி மென்பொருள் வழங்கல் |
| S-23 | நாய்களுக்கான கருத்தடை சேவை (Dog sterilization) |
| S-24 | மருத்துவ உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் |

நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2020ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியான தாகும்.
2. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், தேசிய ரீதியிலான பெறுகைகளின்போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் (Rainbow Pages) பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும். எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கான உரிமையும் உண்டு.
3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக் கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டி ருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளார்.
5. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. குறிப்பிடப்படும் பொருட்கள் சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்பவர்களால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள் ஆவணங்களின் உண்மைத் தன்மையானது பிரதம செயலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் நேரடியாக சென்று பார்வையிடுவதன் மூலமோ நேர்காணலின் மூலமோ பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும். வழங்குநர் குறிப்பிட்ட பொருள்கள், சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படுவதுடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
8. பொருட்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட்டங்கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டி ருத்தல் அவசியம். (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
10. வடமாகாணத்தில் குறைந்தது ஓர் இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை / ஒரு காட்சி அறை / முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
11. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
12. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் வரிப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2019 நவம்பர் மாதம் 20ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக **"பிரதிப்பிரதம செயலாளர் (நிதி), மாகாணத்திறைசேரி, மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2020ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்"** என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
13. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.150.00 க்கான காசுக்கட்டளை **"பிரதிப்பிரதம செயலாளர்- நிதி, வட மாகாணம்."** என்ற பெயரில் **யாழ்ப்பாணம்** தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி , யாழ்ப்பாணம்.** எனும் முகவரியில் இயங்குகின்ற **மாகாணத்திறைசேரி** அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச்சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருட்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப் படாத வைப்பு பணம் ரூபா 150.00 ஆம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
14. **2019 நவம்பர் மாதம் 20ஆம்** திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
15. விண்ணப்படிவங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
16. மேலதிக விளக்கங்களுக்கு **கணக்காளர், மாகாணத்திறைசேரி, வட மாகாணம்** அவர்களுடன் **தொலைபேசி இல 021-2220840** மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

### 2020ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

### வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :-
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-
3. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்கு உட்பட்ட முகவரி :-
   3.1வியாபார நிறுவனத்தின் காட்சி அறை / முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் (Authorized Dealer) முகவரி.-
4. தொலைபேசி இலக்கம்
   நிலையானது (Land) :-
   கைத்தொலைபேசி (Mobile) :-
5. தொலைநகல் (Fax) இலக்கம் :-
6. வியாபார பதிவு இலக்கம் :-
7. வியாபாரத்தின் தன்மை :-
8. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருட்கள் / சேவைகள் விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

9. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள் :-
10. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி (Credit Period):-
11 வற் (VAT) வரி பதிவு இலக்கம் (இருப்பின்) :-
12. மின்னஞ்சல் முகவரி :-
13 வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-
(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்.'. மாவட்டங்களினை "✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவுசெய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால்/ எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்.'.சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா.150.00 ற்கு ......................ம் திகதிய ......................இலக்க காசுக் கட்டளை/பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.................... .................... ....................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

**அ.பத்திநாதன்,**
**பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை,**
**மாகாணசபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி,**
**யாழ்ப்பாணம்**

(o)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலாலியைத்...

னாட்டு வானூர்தி நிலையத்தை திறந்து வைத்த பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது துன்ப துயரத்துக்குப் பின்பு ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு. இந்திய நாட்டின் பங்களிப்போடு இந்த நாட்டின் தலைவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, 2016ஆம் ஆண்டு தேசிய தைப்பொங்கல் விழாவுக்கு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். பலாலி இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் வைத்து, வானூர்தி நிலையம் தேவை என்பதைக் கூறியிருந்தேன். தலைமை அமைச்சரும் அதற்கு இணக்கம் தெரிவித்தார். குறுகிய காலத்தில் இது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவம் கருதி பன்னாட்டு வானூர்தி நிலையம் அமைக்கப்பட்டமைக்கு வரவேற்கின்றேன். 70 ஆண்டுகளாக அரசியல் தீர்வு கொண்டு வரப்படவில்லை. ஆனால் வானூர்தி நிலையம் குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று எமது மக்களின் வேணவாக்களும் தீர்க்கப்பட வேண்டும்.

மயிலிட்டித்துறைமுகம் விடுவிக்கப்பட்டு அங்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அந்தப் பகுதிகள் விடுவிக்கப்படவில்லை. அதேபோன்று பலாலியைச் சூழவுள்ள பிரதேசங்களும் விடுவிக்கப்படவில்லை. பலாலி வானூர்தித் தளத்துக்கான பாதையும் விடுவிக்கப்படவில்லை. அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ஓ,5,21,105,106)

## மைத்திரியை...

ருக்கும் இடையிலான பகைமை நேற்றைய நிகழ்விலும் தெறித்தது.

பலாலி வானூர்தி நிலையம், யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, ஜோன் அமரதுங்க மற்றும் ரவி கருணாநாயக்க, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், வடக்கின் 5 மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்விடத்துக்கு வருகை தந்திருந்தார். அதன் பின்னர் உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நினைவுக் கல் திரைநீக்கும் இடத்துக்கு வருகை தந்தார். இதன் போது அமைச்சர் ரணதுங்க அவரை வரவேற்றார். அருகில் ரணில் விக்கிரமசிங்க பேசாமல் நின்றிருந்தார்.

நினைவுக் கல் திரை நீக்கப்பட்ட பின்னர், வானூர்தி நிலையக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரணதுங்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ஓ,5,21)

## பலாலியில்...

யன்ஸ் எயர் நிறுவன அதிகாரிகள் 17 பேரும், வானூர்திப் பணியாளர்கள் 11 பேருமாக 28 பேர் யாழ்ப்பாணம் வானூர்தித் தளத்தில் கால் பதித்தனர். இவர்கள் பி.ப 2 மணிக்கு சென்னை நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

எயர் இந்தியாவின் துணை நிறுவனமான, அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் ஏரிஆர் 72600 வானூர்தியே யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை வந்தடைந்தது.

சென்னை வானூர்தி நிலையத்தில் நடந்த தொடக்க நிகழ்வை அடுத்து, காலை 9.45 மணியளவில் சென்னை வானூர்தி நிலையத்தில் இருந்து புறப்பட்ட வானூர்தி பலாலியில் உள்ள யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியது. (ம-ஓ,5,21)

## இரணைமடுத்...

கைவிடப்பட்டதாக அர்த்தமல்ல என்று தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் பின்னடைவைச் சந்தித்தமைக்கான காரணம் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற கருத்து முரண்பாடுகளே. அரசியல் பிரச்சினைகளே. மாற்றுக் குடிதண்ணீர் திட்டத்தை முன்வைத்த காரணத்தால் இரணைமடு குடிதண்ணீர்த் திட்டத்தை கைவிட்டுவிட்டோம் என்று அர்த்தம் இல்லை. இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் ஆரோக்கியமான நிலைப்பாடு எட்டப்படுமானால் நிச்சயம் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும். அந்தக் கருத்தொற்றுமையைக் கொண்டுவரும் பொறுப்பு வடக்கு ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. இரணைமடுத் திட்டத்தால் கிளிநொச்சியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டால் அதற்கு - என்றார்.


வடமாகாண சபைகள் அனைத்தும் ஆளுநர் அதிகாரத்தின் கீழ் கொண்டரப்பட்டுள்ளனவே. ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு உள்ளதே? எப்போது மாகாண சகைத் தேர்தலை நடத்தப்போகிறீர்கள்? என்று ஊடகவிலயாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் வழங்கிய ரணில், நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகள் இணாங்கி ஒரு நடவடிக்கையை எடுத்தால் தான் அடுத்த அடியை எடுத்துவைக்க முடியும். தேர்தல் ஆணைக்குழுதான் தேர்தலை நடத்த வேண்டும். அரச தலைவர் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஒவ்வொரு தேர்தல்களாக நடத்தப்படும் -என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
02 • 02 • 1941



மறைவு
18 • 09 • 2019

## பொன்னுத்துரை சந்திரசேகரம்பிள்ளை (ஆனந்தம்)

### ( ISLAND DISTRIBUTER உரிமையாளர்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 5 ஆம் வட்டாரம், மண்கும்பான் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சந்திரசேகரம்பிள்ளை (ஆனந்தம்) **( ISLAND DISTRIBUTER உரிமையாளர்)** கடந்த 18.09.2019 அன்று காலமானார்.

அன்னார் தவலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தசகுமாரன், ஸ்ரீதசப்பிரியா மற்றும் தசப்பிரகாஷ் **(Australia)**, தசவினோதன், தசநிவேதன் ( **ISLAND TOURS AND TRAVELS GLOBAL (pvt) Ltd** ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற தனபாக்கியலட்சுமி, புஸ்பகாந்தி (லண்டன்), யோகேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதர ரும், வர்ணகுலசிங்கம் (ஜங்கரன் மோட்டர்ஸ்), துவாரகா (ஆசிரியை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், காலஞ்சென்ற பரஞ்சோதி நாதன் (ஜோதி விலாஸ், மன்னார்), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, காலஞ்சென்ற ரவீந்திரநாதன், ஜெயலட்சுமி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிர்மலா - வாமதேவன் ( **Germany**), மனோகரன் - வசந்தி ( **Swiss** ), கஜேந்திரன் - வனிதா **(Swiss)**, வசிகரன் - பத்மலோஜினி **(Swiss)**, ரசிகரன் - அனுஷா ( **Swiss**), ஜோதிமாலா - வசந்தகுமரன் ( **Germany** ) , ஜோதிபாலா - சுபாஜினி ( **London**), கஜமுகன் - காயத்திரி (ஜோதி புக்சென்ரர், மன்னார்), சிறிகரன் - சந்திரா (லண்டன்), சிறிபிரபா - சுகா ( **Swiss** ), சிறிவிஜயன் - வாணி ( **Swiss**), சிறிபாபு - ஜெயா (லண்டன்), சிறிவிஸ்திரா - நேசன் ( **Swiss**), சிறிபிறேம் - கார்த்தி (லண்டன்), பிரியம்வதா - மரிபுலோ ( லண்டன்), விவேகன் (லண்டன்), மதுசூதனன் (இந்தியா), ரவிவர்மன் - கவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமா - சித்தப்பா/ பெரியப்பாவும், துஷா - ரூபன் (லண்டன்), கிரிஷா (மாவட்டச் செயலகம் - வவுனியா), நிருஷா - கஜராஜ் ( **France**) , நிலக்ஷன் ( **France**) , மகிஷன் ஆகியோரின் பெரியப்பாவும் / மாமாவும் ஆவார்.

**அன்னாரின் வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**அன்னார் அமரத்துவம் அடைந்த நேரம் சகலவழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும், Team Ritgbury, Samaposha, பொதிகை, மண்கும்பான் இளைஞர்கள், சமூக அமைப்புக்கள், ஆலய நிர்வாகங்களுக்கும் மற்றும் தேவையான உதவி- களைச் சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5ஆம் வட்டாரம், மண்கும்பான்.** **தகவல்:- குடும்பத்தினர்.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பயனுறுதி மிக்க சிறப்பான திட்டம்

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட பலாலி வானூர்தி நிலையம் நேற்று உத்தியோகபூர்வமாகப் பயணிகள் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து அதிகாரிகளை ஏற்றிக்கொண்டு முதல் வானூர்தி வெற்றிகரமாகத் தரையிறங்கியதுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடுகளுக்கான நேரடி வானூர்திச் சேவை தொடங்கப்பட்டது. வடக்குத் தமிழர்களுக்கு வரலாற்றின் மகிழ்ச்சியான தருணங்களில் இதுவும் ஒன்று என்பதை மறுக்கமுடியாது.

போருக்குப் பின்னரான காலத்தில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பெரியளவிலான அபிவிருத்தித் திட்டம் என்று சொன்னால் இதனையே குறிப்பிட முடியும். பெரியளவிலான என்று இங்கு குறிப்பிடும்போது செலவிடப்பட்ட நிதியைக் கருத்தில்கொள்ளவில்லை. அது யாழ்ப்பாணத்தில்எதிர்காலத்தில்ஏற்படுத்தப்போகும்தாக்கத்தையே கருத்தில்கொள்கின்றது.

இந்தப் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் மூலம் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் விரைவான மாற்றங்கள் வளர்ச்சிகள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியாஇலங்கைஇடையில்குறிப்பாகத்தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும்இடையிலானவர்த்தகம்செழிப்பதற்கும் வளர்வதற்கும் இந்த வானூர்தி நிலையம் பெரும் பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சரக்குக் கையாளுகைக்கான பிராந்திய நிலையமாக யாழ்ப்பாணத்தை மாற்றுவது குறித்து இரு நாடுகளும் ஆராய்ந்து வருவதாக நேற்றைய நிகழ்வில் பேசிய கொழும்புக்கான இந்தியத் தூதுவர் தெரிவித்தார். அத்தகைய முன்னேற்றம் ஒன்றும் ஏற்பட்டால், அது யாழ்ப்பாணத்திற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை. பொருளாதார வளர்ச்சிக்கும் அது பெரும் பங்கையாற்றும்.

சென்னைமற்றும்திருச்சிக்கும்யாழ்ப்பாணத்திற்கும்இடையிலான இந்த வான் பயணச் சேவையின் மூலம் பொருளாதார நலன்கள் மட்டுமன்றி, இரு தரப்புகளுக்கும் இடையிலான பண்பாட்டு நெருக்கமும் மேலும் அதிகரிக்கும். உண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதைவிடக்குறைவானநேரத்தில்இந்தியநகரங்களை அடைந்துவிட முடியும்என்கிறநிலை, இருபகுதிகளுக்கும் இடையிலானநெருக்கத்தை மேலும்அதிகரிக்கச்செய்யும்.

இத்தகைய பல கோணங்களில் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் வடபகுதியின் எதிர்காலத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதன் அடிப்படையிலேயே பெரியளவிலான அபிவிருத்தி என்று அதனைவரையறுக்க முடிகின்றது.

தேர்தல் தேவைக்காக இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன இத்தகையதொரு அபிவிருத்தியைச் சாத்தியப்படுத்தியதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சிக்கும் இந்திய அரசுக்கும் பெரும் நன்றியைத் தெரிவிப்பது அவசியமானது.

இத்தகைய அபிவிருத்திகளை இன்னும் கொஞ்சக் காலத்திற்கு முன்பே செய்திருந்தால் இப்போது அதன் பயனைத் தமிழர்கள் அனுபவிக்கத் தொடங்கியிருப்பார்கள் என்கிற ஆதங்கம் இருந்தாலும், தமிழர்களின் நீண்ட காலக் கனவு ஒன்று நிறைவேறியிருப்பது நம்பிக்கையைத் தந்துள்ளது.

இத்துடன் நின்றுவிடாது காங்கேசன் துறைமுகத்தையும் விரைவில் இதுபோன்றே அபிவிருத்தி செய்து அதனையும் பொதுப் பயன்பாட்டிற்குக் கையளிக்க வேண்டும். பன்னாட்டு வானூர்தி நிலையம் மற்றும் துறைமுகம் ஆகியன முழுமையாகச்செயற்படத்தொடங்கிவிட்டால்வடக்கின் பொருளாதாரத்தில் அது பெரும் மாற்றங்களை நிச்சயம் கொண்டுவரும்.

எனவே பலாலியைப் போன்றே காங்கேசன் துறையின் அபிவிருத்தியையும் விரைவுபடுத்தி முடிப்பதற்கு கொழும்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

# புதிய தலைவருக்கு சவாலாகும் பொருளாதார பின்னடைவு

சேரலாதன்

நாம் வாழ்கின்ற இந்த அழகிய நாட்டைப்பூலோகத்தின் சொர்க்கமெனச் சிலர் கூறுவார்கள். அந்த அளவுக்கு வளங்கள் இங்கு குவிந்து கிடக்கின்றன. நான்கு பகுதியும் கடலால் சூழப்பட்ட இந்த நாடு மலைகளையும் காடுகளையும் வளம்மிக்க விவசாய நிலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. குளிர்ப் பிரதேசங்களையும் வெப்பமான பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. அருவிகளுக்கும், நதிகளுக்கும் இங்கு குறைவில்லை.

மன்னர்களாலும் அந்நியராலும் அமைக்கப்பட்ட குளங்கள் விவசாயத்துக்குப் பெரிதும் துணை நிற்கின்றன. ஆனால் எமக்குத் தேவையான உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றோம்.

இது தீவு என்பதால் மீன்வளத்துக்கு குறைவில்லை. ஆனால் எமக்குத் தேவையான மீன்களை எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதனையும் இறக்குமதி செய்கின்ற நிலையில் தான் நாம் உள்ளோம்.

ஒரு கால கட்டத்தில் தரமான தேயிலையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் இலங்கை முக்கிய இடத்தைக் கொண்டிருந்தது. இலங்கைத் தேயிலையென்றால் ஒரு தனி மதிப்பு: காணப்பட்டது. தேயிலை, றபர், கொக்கோ ஆகியவற்றை அதிகளவு உற்பத்தி செய்து பெருமளவில் ஏற்றுமதி செய்கின்ற நாடாகவும் இலங்கை விளங்கியது. நாட்டின் தேசிய வருமானம் அதிகரித்தது. அந்தியச் செலாவணிக் கையிருப்பும் தேவையான அளவுக்குக் காணப்பட்டது. பிற நாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் காணப்படவில்லை.

> புதிய அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் எவராக இருந்தாலும் அவர் நாட்டின் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும். பாதாளத்தில் வீழ்ந்திருக்கும் நாட்டை மீட்காவிட்டால், இலங்கை பொருளாதார ரீதியாகப் பாலைவனமாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

ஆனால் இன்று யாவும் தலைகீழாக மாறிவிட்டன. மலையகப் பெருந்தோட்டங்கள் தமது பழைய பெருமையை இழந்து காணப்படுகின்றன. தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. தேயிலைத் தோட்டங்கள் உரிய வகையில் பராமரிக்கப்படாமையே இதற்கான காரணமாகும். தனியார் தோட்ட நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்குவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அது மட்டுமல்லாது தேயிலைத் தோட்டங்களில் வளர்ந்து நிற்கின்ற பெரிய மரங்களைத் தறித்து விற்பனை செய்வதிலும் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றச்சாட் டுக்கள் எழுந்துள்ளன. அரசால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்பது கண்டிக்கத்தக்கது. தேயிலை போன்று தான் றபர் மற்றும் கொக்கோயின் உற்பத்தியும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன.

தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதற்காக வெள்ளையரால் அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் அனைவருமே தமிழ்நாட் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. வறிய நிலையில் இருந்த இந்த மக்கள் பல்வேறு ஆசை வார்த்தைகளால் கவரப்பட்டு இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தனர். மரணப் பொறி இங்கு காத்திருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

அந்த மக்களுக்கு உரிய வகையில் உணவுகள் வழங்கப்படவில்லை. அவர்கள் தங்குவதற்கு உகந்த வசதிகளும் செய்து தரப்படவில்லை. கடுமையான குளிர் அவர்களை வாட்டியது. காடுகளை அழிக்கும் பணியில் ஈடுபட்ட ஏராளமானவர்கள் மலேரியா நுளம்புகளால் பாதிக்கப்பட்டனர். மலேரியாக் காய்ச்சல் பலரது உயிர்களைக் காவு கொண்டது. அதன் பின்னரும் அந்த மக்கள் எதிர்கொண்ட அவலங்கள் ஏராளம். ஆனாலும் அந்த மக்களின் கடுமையான உழைப்பின் பயனாக உருவான பெருந்தோட்டங்கள் அதிக வருவாயை ஈட்டிக் கொடுத்தன. இன்று அவற்றை அழித்துவிடுகின்ற முயற்சிகளே இடம்பெற்ற வருகின்றன.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் அரச தலைவருக்கு நாட்டின் பொருளாதாரம் மிகப் பெரிய சவாலாகவே விளங்கப்போகின்றது. பொருளாதார ரீதியாகத் துன்பங்களை எதிர்கொள்ளும் மக்களைத் தொடர்ந்தும் அவரால் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது. அவர்களுக்குத் தேவையான உதவிகளைத் தாமதமின்றி வழங்க வேண்டும். அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்கள் உடனடியாக வகுக்கப்படல் வேண்டும்.

ஊழலும் மோசடிகளும் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் தீங்கை விளைவிக்கின்றன. ஒரு சிலர் நாட்டின் செல்வத்தைச் சூறையாடிக் கொண்டிருக்கும் போது பலர் வறுமையில் உழல்கின்றனர். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் விசாரிக்கப்பட்டு அவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். மோசடி செய்யப்பட்ட அரச நிதி மீளப் பெறப்பட வேண்டும். பிற நாடுகளிடமிருந்து கடன்களை வாங்குவதை முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும். உள்ளூர் உற்பத்திகளை விருத்தி செய்வதன் மூலமாக தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும்.

புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமாகப் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும். நாட்டின் பொருளாதாரமும் சீரடையும். மேலும் அரசியல்வாதிகளின் நலன்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்குகின்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தி வைக்கப்படல் வேண்டும். மக்களுக்குத் சேவை செய்வது தான் அரசியல்வாதிகளின் பிரதான கடமையாகும். அதனால் இவர்களுக்கு மட்டுமே சிறப்புரிமை வழங்கப்படல் நல்லதல்ல.

புதிய அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் எவராக இருந்தாலும் அவர் நாட்டின் பொருளாதாரத்துக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும். பாதாளத்தில் வீழ்ந்திருக்கும் நாட்டை மீட்காவிட்டால், இலங்கை பொருளாதார ரீதியாகப் பாலைவனமாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானா பிரபா

# யாழ்ப்பாணம் பறக்குது பார்

"பொங்கை பார்
வாறான்...
வாறான்
குத்துறான்...குத்துறான்....
குத்துறான்
குத்தீட்டான்..."

இரண்டு கன்னங்களிலும் கை வைத்துக் கொண்டு தூரத்தே வானத்தைப் பார்த்துப் பேசுவது அப்போதெல்லாம் வழக்கமானதொரு நிகழ்வு. ஏன் நாளாந்த வேலை என்று கூடச் சொல்லலாம்.

"இங்கை தான் வாறன்
ஓடுங்கோ ஓடுங்கோ
பங்கருக்குள்ளை ஓடுங்கோ...."

வீட்டு முற்றத்திலோ அன்றில் பின் வளவிலோ வெட்டி வைத்திருக்கும் பதுங்கு குழிக்குள் ஓடி ஒளிய வேண்டும். காதைப் பொத்திக் கொண்டிருந்தால் அந்த அடைப்பை மீறியும் பேரிரச்சல் கேட்கும். நிலம் ஒரு தடவை நில நடுக்கம் கண்டது போல அதிர்ந்து விட்டு ஓயும். ஊர் நாய்கள் எல்லாம் வாள் வாளென்று கத்தி அழும்.

"உங்காலிப் பக்கம் தான் எங்கேயோ குண்டைப் பறிச்சிட்டான் போல"

சத்தம் வந்த திக்கைப் பார்த்துப் பேசி விட்டு விமான இரைச்சல் ஓய்ந்த பின்னர் மெல்லப் பதுங்கு குழியை விட்டு வெளியே வருவோம்.

வீதியில் பயணிக்கும் போது தலைக்கு மேலால் ஹெலிகொப்டர் வட்டமடித்தால் சைக்கிளைப் போட்டது போட்டபடி விட்டு விட்டு எங்கேனும் மதகுப் பக்கம் போய் ஓடி ஒளிய வேண்டும்.

இப்படித்தான் யாழ்ப்பாணத்துச் சனத்துக்கும் விமானத்துக்குமான தொடர்பு ஆரம்பித்தது.

"பொங்கை பார் பலாலியால போறான்" என்று மேலே போகும் விமானத்தை ஒரு கொடும் சீவராசி போலவே பார்ப்போம். 1986 ஆம் ஆண்டு அயலூரான தாவடியில் போட்ட முதல் குண்டு வீச்சு அனுபவத்தில் இருந்து பத்தாண்டுகள் இம்மாதிரியான அனுபவங்களை நானும் என் தலைமுறையும் கண்டிருக்கும்.

அப்போதெல்லாம் இன்னொரு வேடிக்கையும் நடக்கும். உலங்குவானூர்தி வழியாக மேலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசுவார்கள்.

"பயங்கரவாதிகளின் இலக்குகளைச் சிறீலங்கா வானூர்திப் படை இனம் கண்டுள்ளது. அவற்றின் மீது தாக்குதல் செய்யப் போகிறோம். உங்கள் ஒத்துழைப்பையும், மேலதிக தகவல்களையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்" என்ற தொனியில் அந்தச் சிறு துண்டுப் பிரசுரங்கள் எழுதப்பட்டிருக்கும்.

உலங்குவானூர்தி போட்ட அந்தத் துண்டுப் பிரசுரம் வானத்தில் மிதந்து மிதந்து காற்றின் திசையில் அலைக்கழிக்கப்பட்டு நிலத்தில் வந்து சேருமிடத்தை விரட்டிக் கொண்டே போய் அந்த ஒற்றையை எடுப்பது ஏதோ சாதனை போல எங்களூர்ச் சனங்களுக்கு. அதை வாசித்து முடித்துக் கசக்கி எறிந்து விட்டுப் போவார்கள்.

இந்த மாதிரியானதொரு காலகட்டத்தில் இலங்கை அரசு தரை வழியான இராணுவ நடவடிக்கையை 1987 ஆம் ஆண்டு மே மாதம் ஒபரேஷன் லிபரேஷன் என்ற பெயரில் ஆரம்பித்து மெல்ல மெல்ல யாழ்ப்பாணக் குடா நாட்டின் பகுதிகளைப் பிடித்துக் கொண்டே வர மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்க, எஞ்சிய சனம் இடம் பெயர்ந்து கொண்டிருந்தது.

அந்தச் சூழலில் ஜூன் 4 ஆம் திகதி, 1987 ஆம் ஆண்டு கார்த்திகேசு மாமா வீட்டு முற்றத்தில் நான் விளையாடிக் கொண்டிருந்தேன். திடீரென்று காதைக் கிழிக்குமளவுக்குப் பேரொலி. எங்களின் தலைக்கு மிக அண்மித்ததாக கூட்டம் கூட்டமாக விமானங்களின் அணி வகுப்பு வானத்தில்.

**2004 ஆம் ஆண்டில் ஒரு நெருக்கடியான சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வருவதற்கு வானூர்திப் போக்குவரத்து ஒன்றையே நாட வேண்டிய சூழலில் முதன் முதலாக அந்த அனுபவத்தைச் சந்தித்தேன். எக்ஸ்போ வானூர்தி மூலம் பயணம் செய்ய ஏற்பாடாகி விட்டது. யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் என்னோடு சக பயணிகளுமாகத் தீவிர இராணுவச் சோதனைக்கு உள்ளாகி இராணுவத்தின் பஸ்ஸிலேயே பலாலி விமானத் தளம் போகிறோம்.**

"ஐயோ போச்சு போச்சு"

என்று நடுங்கிக் கொண்டே தரையில் விழுகிறோம். ஆனால் ஒனறும் நடக்கவில்லைப் போல. உடம்பு நடுங்குகிறதே தவிர அப்படியே இருக்கிறது. விமான இரைச்சல் நம்மை விட்டுக் கடந்த சொற்ப நொடிகளில் மெல்ல மேலே பார்க்கிறோம். குட்டிக் குட்டிப் பாரசூட்டுகளாய் வெள்ளைப் பொட்டலங்களாக ஏதோ போடப்படுகின்றன. சில மணி நேரத்தில் ஊரெல்லாம் கதை பரவி விட்டது இந்திய வானொலி புண்ணியத்தில். அது தான்

"ஒபரேஷன் பூமாலை"

எங்கள் பக்கம் இந்திய அரசு இருக்கிறது என்று முதலும் கடைசியுமாக மார் தட்டிய நிகழ்வு அது. அப்போது ராஜீவ் காந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது இன்னொரு நாட்டின் பறப்புச் சட்ட விதிகளைப் புறந்தள்ளி மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கை அந்த ஒபரேஷன் பூமாலை. விமானத்தில் இருந்து போடப்பட்ட பொட்டலங்களில் இருந்த தகரத்தில் அடைக்கப்பட்ட சமைத்த உணவுகளை அப்போது யாரும் சாப்பிட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தேடித் தேடிப் பிடித்து ஆசையாக வைத்துக் கொண்டார்கள் அந்த ஒபரேஷன் பூமாலை போட்ட உணவுப் பொதிகளை.

ஆனால் இப்படியெல்லாம் நடக்குமா என்று ஒவ்வொரு அரசியல் காய் நகர்த்தல்களும் தமிழருக்கு எதிராகவே மாறின. வட பகுதியின் தலைப் பட்டினம் யாழ்ப்பாணத்தில் இருந்த பலாலி இராணுவத் தளத்தில் இருந்து முன்னர் எப்படி இலங்கை வானூர்திப் படை குண்டு போடும் விமானங்களைக் கிளப்பியதோ அதே விமானப் படைத் தளத்தில் இந்திய இராணுவத்தினர் அமைதிப்படை என்ற பெயரில் நிலை கொண்டு அப்போது ஏராளம் இளைஞர்களை அடைத்து வைத்த சித்திரவதை முகாமாக மாறியது. மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தினம் "ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை" நூலிலும் பலாலி இராணுவ முகாமில் தன் கொடிய நாட்களை எழுத்தில் வடித்திருக்கிறார். இவ்வாறு பலாலி விமானப் படைத்தளம் 33 வருடங்களாக (1986 2009) தமிழரைப் பொறுத்தவரை காவு எடுக்கும் யமதர்மசாலையாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் நான் கொழும்புப் பக்கம் வந்தால் மேலே பறக்கும் உலங்கு வானூர்திச் சத்தம் கேட்டு போர் பூமியில் சுற்றிய உலங்குவானூர்தி நினைவில் தலை முடியெல்லாம் குத்திட்டது போல உணர்வெல்லாம் வந்திருக்கிறது. அந்தப் போர் பூமியை விட்டுக் கடந்த புலம் பெயர்ந்த குழந்தைகள் சாதாரண பயணிகள் விமானச் சத்தம் கேட்டு மேசைக்கு அடியில் ஓடி ஒளியும் கதையெல்லாம் உண்டு.

போர் நடந்த காலத்துக்கு முன்னர் எயார் சிலோன் என்ற இலங்கை அரசின் விமான சேவையும் பின்னாளில் உபாலியின் தனியார் வானூர்திச் சேவையும் யாழ்ப்பாணத்தில் இருந்ததாக ஞாபகம். போர்க்காலத்திலும் தனியார் வானூர்திச் சேவைகள் சில இயங்கின. எக்ஸ்போ எயார் மற்றும் லயன் எயார் போன்ற வானூர்திச் சேவைகள் அப்போது பறப்பில் இருந்தன.

2004 ஆம் ஆண்டில் ஒரு நெருக்கடியான சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வருவதற்கு வானூர்திப் போக்குவரத்து ஒன்றையே நாடவேண்டிய சூழலில் முதன் முதலாக அந்த அனுபவத்தைச் சந்தித்தேன். எக்ஸ்போ வானூர்தி மூலம் பயணம் செய்ய ஏற்பாடாகி விட்டது. யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் என்னோடு சக பயணிகளுமாகத் தீவிர இராணுவச் சோதனைக்கு உள்ளாகி இராணுவத்தின் பஸ்ஸிலேயே பலாலி விமானத் தளம் போகிறோம். வழியெங்கும் தடுப்புச் சோதனைச் சாவடிகள். ஒவ்வொன்றாகக் கடந்து செல்லும் போது எங்களுக்கு ஒரு பெரிய சோதனை காத்திருக்கிறது என்று. பலாலி இராணுவ விமானத் தளத்தை அண்மித்த இன்னொரு தடுப்பு நிலத்துக்குள் நுழைகிறது நாம் பயணித்த பேருந்து. படாரென்று ஒரு சத்தம். பேருந்து பாதையை விட்டு விலகிப் போய் கவிழ்ந்து போய் கிடக்க, அந்த அதிர்ச்சியை உள்வாங்கிக் கொண்டு "ஐயோ ஐயோ" என்று பயணிகளின் கூக்குரல். நானும் கவிழ்ந்து போன அந்த பேருந்துக்குள் வாயடைத்துப் போய் திக்கித்து இருக்கிறேன்.

பேருந்தில் இருந்து குதித்த ஒரு இராணுவச் சிப்பாயோடு அண்மித்த பக்கத்தில் கண்காணிப்பில் இருந்த இராணுவமும் வந்து சேர போட்டது போட்டபடி பஸ்ஸைச் சுற்றிச் சோதனையிடுகிறார்கள். புலிகள் தான் கிளைமோர் குண்டைக் கிண்டைப் போட்டிட்டினமோ என்று சனம் அந்தக் குறுகிய நேரத்தில் தீவிரப் புலனாய்வில் இறங்க, இராணுவச் சிப்பாய் ஒருவன் வந்து மெல்ல மெல்ல ஒவ்வொருவராக பஸ்ஸின் பின் பக்கக் கதவை உடைத்து இறங்கச் சொல்ல ஒவ்வொருவராக இறங்கினோம். பிறகு தான் தெரிந்தது தார் போடாத அந்த மண் சாலையில் இருந்து விலகி பஸ் வீதியோர நீண்ட பதுங்கு குழிக்குள் ஐக்கியமாகியிருப்பது.

இந்த அமளிக்குள் ஒரு கூத்து. கனடாவோ எங்கோ இருந்தோ வந்திருந்த ஒரு கிழவி தன்னுடைய கமராவை எடுத்து அந்தக் கவிழ்ந்த பஸ்ஸைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்.

[illegible] கூடாது அங்கிட்டுப் போங்கோ" என்று ஒரு சிப்பாய் அரைகுறைத் தமிழில் சொன்னதை அசட்டை பண்ணிக் கொண்டே சிரித்துக் கொண்டு படம் எடுத்தார்.

அந்தச் சிப்பாய் முறைத்துப் பார்த்து விட்டுக் கிழவியின் கமராவைப் பறித்துக் கொண்டு போய் விட்டான்.

"விசர்க் கிழவி இடம் வலம் தெரியாமல் படமெடுக்குது" என்று சனம் திட்டித் தீர்த்தது.

இன்னொரு பேருந்து வர பலாலி விமானத்தளத்துக்குப் போய் இன்னொரு சோதனைச் சாவடி கண்டு இன்னொரு சோதனையோடு விமானத்துக்குள் ஏறினோம்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான அந்தக் குட்டி விமானப் பயணம் தட்டி வானில் பாழடைந்த தார் றோட்டில் யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போகும் அனுபவம் போல, காற்றடிக்கும் திசையெல்லாம் சுற்றிச் சுற்றிப் பெருங்குடல் சிறுகுடல் எல்லாம் ஆட ஆட திருகோணமலை கண்டு (திருக்கணாமலை என்று சிங்களத்தில் வேறு அறிவிப்பு) கொழும்பு வந்திறங்கினோம். அப்பாடா என்றது மனது.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்குமான பயணம் ஏதோ பக்கத்து ஊருக்குப் போய் வருவது போலக் கடல் வழிப் பாதையால் சுலபப்பட்டது. புதுப்படங்கள் அப்போது இலங்கையில் சுடச் சுடத் திரையிடப்பட மாட்டாது என்பதால் படம் பார்க்க வல்வெட்டித்துறையில் இருந்து தமிழகத்தின் தூத்துக்குடி, இராமநாதபுரம் கடலோரப் பகுதிகளுக்கும் திருச்சிக்குமாக வெள்ளிக்கிழமை பயணித்து இரவுக் காட்சி படத்தைத் தியேட்டரில் பார்த்து விட்டு அடுத்த நாள் காலை மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவது எண்பதுகளுக்கு முந்திய காலத்தில் சர்வ சாதாரணம். இங்கிருந்து லக்ஸ் சோப், ராணி சந்தன சோப், மற்றும் ஜப்பான் ரேடியோ போன்ற அப்போது இந்தியாவில் கிடைக்காத பொருள்களை வியாபார நிமித்தம் கொண்டு போவதும் அங்கிருந்து சேலை உள்ளிட்ட பொருட்களை யாழ்ப்பாணத்துக்குல் கொண்டு வருவதுமான கடல் வழி வர்த்தகப் போக்குவரத்தும் இருந்தது.

இந்தமுறை தாயகப் பயணத்தில் அண்ணாவுடன் இந்த விமானப் போக்குவரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது அந்தக் காலத்தில் பலாலி விமான நிலையத்தினூடாக தந்தை செல்வாவின் இறுதி நிகழ்வுக்கு வந்திருந்த அரசியல் தலைவர்களைச் சந்தித்த அனுபவங்களைப் பேசினார். கே.பி.சுந்தராம்பாள் உள்ளிட்ட கலையுலக நட்சத்திரங்கள், அறிஞர்கள் கூட இவ்வழியே வந்திருக்கிறார்கள் யாழ்ப்பாணத்துக்கு. அப்போது அம்மாவின் சிறிய தந்தை வீட்டில் அவர்களின் சந்திப்புகளின் புகைப்படங்களை ஆவணமாக எடுத்து வந்திருக்கிறேன்.

இப்போது பலாலி விமான நிலையத்தின் பெயர் யாழ்ப்பாண நிலையமாகப் பெயர் மாற்றம் கண்டு இந்திய நகரங்களுக்கான போக்குவரத்து நடக்கப் போகிறது. இந்த விமானப் போக்குவரத்தின் மீதான விமர்சனங்களை ஒரு பக்கம் ஒதுக்கி விட்டுத் தாய்த் தமிழகத்துக்கும் நமக்குமான இடைவெளி சுருங்க வேண்டும், விட்டுப் போன அந்த அழகிய பழைய பந்தம் இறுக வேண்டும் என்பதே என் ஆதங்கம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியை நிலைநிறுத்த முதலாளித்துவக் கட்சிகள் முயற்சி

## பாணி விஜேசிறிவர்தன குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.18

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் முதலாளித்துவ கட்சிகள் நாட்டில் இராணுவ ஆட்சியை நிலை நிறுத்தவே முனைகிறார்கள் இவ்வாறு சோசலிச சமத்துவ கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் பாணி விஜேசிறிவர்தன தெரிவித்தார். யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: உலக நாடுகளின் எதிர் பார்ப்பில் இந்த அரச தலைவர் தேர்தல் நடைபெறுகிறது. இதில் பெரும் கட்சிகளை காப்பாற்றும் பொறுப்பில் பலர் களம் இறங்கியுள்ளனர். காலம் காலமாக யானைச் சின்னத்தில் போட்டியிடுவபர்கள் தற்போது அன்னச் சின்னத்தில் கேட்கிறார்கள். அதைஆதரித்து பலர் உள்ளனர். ஒடுக்கபடும் மக்களின் தொழிலாளர்களின் நிலை பற்றி யாரும் சிந்திக்க வில்லை. பெரிய கட்சிகள் என்று சொல்லப்படும் கட்சிகளின் தேர்தல் பரப்புரை வாக்குறுதிகளைப் பார்த்தால் மக்களுக்கு விளங்கும். ஒருவர் மக்களை கொல்லும் படைக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவை சட்ட அமைச்சர் ஆக்குவேன் என்கிறார். மற்றவர் தான் ஆட்ச்சிக்கு வந்த மறுநாள் சிறையில் உள்ள இராணுவத்தினரை விடுவிப்பேன் என்கிறார். அன்று எமது மக்களை கொன்று குவிக்க காரணமானவர்கள் இவர்கள். தேர்தல் வேட்பாளர்களின் வாக்குறுதிகள் மீண்டும் இராணுவ ஆட்சியை நிலை நிறுத்தி மக்களை நசுக்குபவையாகவே அமைந்துள்ளது. அவர்களின் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என்று மக்கள் விளங்கி கொள்ள வேண்டும். பன்னாட்டு நாணய நிதியம் நாட்டில் பொருளாதார நெருக்கடி 3.5 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ளது. வரவு செலவு விடயங்களைக் கவன மாககையாளுங்கள் என்று கூறியுள்ளது. தேர்தல் வாக்குறுதிகளில் அதை செய்வேன் இதை செய்வேன் என்று சொல்கிறார்கள். அதற்கு நிதி நிலைமை, பொருளாதார நெருக்கடி எவ்வாறு இடம் கொடுக்கும். பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் தொடர்ந்தும் ஏமாளியாகிறார்கள். அவர்களின் உரிமைகள் இல்லாமல் போகிறது. தொழிலாளர்கள் பலப்பட வேண்டும்.எமது நாட்டில் இருந்து எதைப் பெற்று கொள்ளலாம் என்று உலக நாடுகள் பார்த்து கொண்டு இருக்கிறன. அதற்கு அமைவாக இங்கு பல்வேறு விடயங்கள் நடக்கிறது. அவை தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். என்றார். (ஏ-7)

### குருதிக் கொடை முகாம்



வவுனியா, ஒக்.18
வவுனியா, நெளுக்குளத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் குருதிக் கொடை முகாம் நடத்தப்பட்டது. இந்த குருதிக் கொடை முகாமில் 50க்கும் மேற்பட்டவர்கள் குருதிக் கொடை வழங்கினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-ரி4)

### முன்பள்ளி சிறார்களின் கதை கூறல் நிகழ்வு



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி சிறார்களுக்கு கதை கூறல் நிகழ்வு நடைபெற்றது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் புதுக்குடியிருப்பு பொது நூலகத்தினரின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பிரதேசத்தில் உள்ள 41 முன்பள்ளிகளிலிருந்து தலா இரு மாணவர்கள் வீதம் 82 முன்பள்ளி சிறார்கள் பங்குபற்றினர். இதில்சிறப்பாககதை கூறலை மேற்கொண்ட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

# நல்லூர் பிரதேசத்துக்குள் மீள மாட்டு இறைச்சிக் கடை

யாழ்ப்பாணம், ஒக்.18
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மீண்டும் மாட்டு இறைச்சிக் கடைகளை திறந்து வைக்க சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மாட்டு இறைச்சிக் கடைகளை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் என்று தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டு, அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மாட்டு இறைச்சிக் கடைகளை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீளவும் திறந்து வைப்பது என்றும், சகல மாட்டு இறைச்சிக் கடைகளிலும் நாம்பன் மாட்டு இறைச்சிகளே விற்பனை செய்ய வேண்டும். பசு, மாடுகள் இறைச்சிக்கு பயன்படுத்துவதும் தடை எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
சபையின் இந்தத் தீர்மானத்தை மீறி பசு மாடுகளை வெட்டி இறைச்சிக்கு பயன்படுத்துவோர் பிடிக்கப்பட்டால் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதேச சபை தெரிவித்தது.
மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதேச சபை தெரிவித்தது.
சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் மாட்டு இறைச்சி விற்பது கடந்த 2018ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டது. இதன் காரணத்தால் இந்தப் பிரதேசத்தில் உள்ள சகல மாட்டு இறைச்சிக்கடைகளும் பூட்ட ப்பட்டன. (ஐ-17)

### ஒன்றுகூடலும் விருந்துபசாரமும்

கிளிநொச்சி,ஒக்.18
கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய 1996 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர மாணவர்களின் ஒன்றுகூடலும், விருந்துபசார நிகழ்வும் இடம்பெறவுள்ளன.
இந்த நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் 96 ஆம் ஆண்டு அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலராக பசுபதி தயானந்தன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ-160)

### சிறார்களுக்கு மகிழ்வூட்டும் சிறப்பு நிகழ்வு

சாவகச்சேரி,ஒக்.18
தேசிய வாசிப்பு மாதத்தையிட்டு சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூல கத்தினர் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு மகிழ்வூட்டும் சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.
இந்த நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை நூலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடைபெறவுள்ளது என்று நூலகர் கி.கிருஷ்ணவதனி அறிவித்துள்ளார். (ஐ-9)

# பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்திய இருவருக்கு கடூழியச் சிறை தண்டனை

திருகோணமலை, ஒக்.18
பெண் ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இருவருக்குத் தலா 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்டவருக்கு 5 லட்சம் ரூபா நட்ட ஈடு வழங்கவும் திருகோணமலை மேல் நீதிமன்று தீர்ப்பு வழங்கியது.
இந்த வழக்கு நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.
2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதிக்கும் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் திருகோணமலை நிலாவெளி இலுப்பைங்குளம் கிரேஸ்டி சிறுவர் இல்லத்துக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருந்த மந்த புத்தியுடைய பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்று சிறுவர் இல்லத்துடன் தொடர்புடைய இருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கு தொடர்பாக விளக்கம் இடம்பெற்று சாட்சிகள் ஒப்புறுதி கருதப்பட்டது. இருவருக்கும் எதிராக இரு வேறு வழங்குகளாகப் பதிவு செய்யப்பட்ட வழங்குகளில் இருவருக்கும் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஏ)

### கசிப்பு வைத்திருந்த நபருக்கு பிணை; தண்டனைக்காக வழக்கு ஒத்திவைப்பு

கொடிகாமம்,ஒக்.18
30 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆட்பிணை வழங்கப்பட்டுள்ளது.
தண்டனைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
மந்துவில் கிழக்குப் பகுதியில் வைத்து இவர் நேற்றுமுன்தினம் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அன்றைய தினமே சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குற்றவாளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.
தண்டனைக்காக எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக் கிணற்றின் நீரில் திடீரென ஏற்பட்ட மாற்றம்

## அதைப் பயன்படுத்த வேண்டாம் என சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்

தென்மராட்சி, ஒக்.19

நீண்ட காலமாகத் தென்மராட்சியில் பயன்படுத்தப்பட்ட பொதுக் கிணறு ஒன்றின் நீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அந்தக் கிணற்றைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வரணி, இயற்றாலையில் உள்ள பொதுக் கிணறு ஒன்றை அங்குள்ள 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வந்தன. அண்மையில் பெய்த மழையை அடுத்து அந்தக் கிணற்றின் நீரின் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அது தொடர்பாகச் சுகாதாரப் பிரிவினர் ஆய்வு நடத்தினர். அந்தக் கிணற்று நீரில் நைதரேற்றின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர். நீரின் நிறத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கிணற்றுக் கட்டின் ஊடாக மழை நீர் உட்செல்ல வழியில்லாததால், கிணற்றின் நீர் ஊற்றிலேயே மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகின்றது. அதையடுத்துக் அந்தக் கிணற்றைப் பயன்படுத்துவதற்குச் சுகாதரப் பிரிவினர் தடை விதித்துள்ளனர்.

இதனால் அந்தக் கிணற்றில் இருந்து இதுவரை காலமும் குடி தண்ணீரைப் பெற்று வந்த மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (எ-9)

### பொது நூலகத்தால் பல்வேறு போட்டிகள்

தென்மராட்சி, ஒக்.18

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொது நூலகத்தால் பல்வேறு போட்டிகள் நாளை தொடக்கம் நடத்தப்படவுள்ளன.

வரணி கலாசார மண்டபத்தில் நாளை சனிக்கிழமை தரம் 1, 2 மாணவர்களுக்கு அபிநயப் பாடல், தரம் 4,5, மாணவர்களுக்குப் பேச்சு போட்டிகள், தரம் 3 மாணவர்களுக்கு வாசிப்பு (தமிழ்), தரம் 6, 9 மாணவர்களுக்கு வாசிப்பு (சிங்களம்), தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கிடையே வாசிப்பு (ஆங்கிலம்) போட்டிகளும், தரம் 10 ,11 மாணவர்களுக்குப் பேச்சு (ஆங்கிலம்), தரம் 10,11 மாணவர்களுக்கிடையே விளம்பர அறிவிப்பு (தமிழ்), தரம் 12,13 மாணவர்களுக்கிடையே பேச்சு (தமிழ்) தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையும் மாணவர்களுக்கிடையே விவாதம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரணி பொது நூலகத்தில் தரம் 4 தொடக்கம் தரம் 13 வரை கவிதை கூறல் மற்றும் தரம் 1,2 ,7 , 8, 10 ,11 மாணவர்களுக்கிடையே சித்திரப் போட்டியும் நடைபெறும். எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை தரம் 9,10, 11 மாணவர்களுக்கிடையே கட்டுரை (தமிழ்), 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தரம் 12,13 மாணவர்களுக்கிடையே சிறுகதை மற்றும் பொது அறிவு ஆகிய போட்டிகளும் இடம் பெறவுள்ளன. (ஐ-9)

### ஓவியக் கண்காட்சி

சாவகச்சேரி, ஒக்.18

சாவகச்சேரி தேவாலய சலையில் உள்ள ரீ.பீ. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக்கூடத்தின் ஓராண்டு நிறைவை யொட்டி ஓவியர் எம். எஸ். சிவதாசனின் தாயன்பு ஓவியக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு ஓவியக்கூடத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஓவியக்கூட இயக்குநர் திருமதி யோகமணி அழகரட்ணம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## கனகராயன்குளம் ம. விக்கு அதிபரை உடன் நியமிக்குக

### பெற்றோர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.18

கனகராயன்குளம் மகா வித்தியாலத்துக்கு அதிபர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பாடசாலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும் அவர் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்டது கனகராயன்குளம் மகா வித்தியாலயம். இந்தப் பாடசாலை தரம் 6 முதல் க.பொ.த. உயர்தரத்தில் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பப் பிரிவுகளைக் கொண்ட பாடசாலையாகும். பாடசாலைக்குக் கடந்த மார்ச் மாதம் முதல் அதிபர் நியமிக்கப்படவில்லை என்று பெற்றோர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதிபர் இல்லாது பாடசாலை இயங்குவது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த விடயம் வவுனியா வடக்குக் கல்வி வலயத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டமையை அடுத்து, மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் இதுவரை அவர் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை அதிபர் நியமனம் தொடர்பாகக் கல்வித் திணைக்களம் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றது. இது பாடசாலையின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தும். பாடசாலைக்கு அதிபரை நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக நாம் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரைச் சந்திக்கத் தீர்மானித்துள்ளோம் என்று பெற்றோர்கள் தெரிவித்தனர். (எ-422)

### தொடர்ச்சியாக ஒளிர்ந்த சமிக்ஞையால் குழப்பம்!

வவுனியா, ஒக்.18

வவுனியா மன்னார் வீதியில் காமினி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள தொடருந்துக் கடவையில் உள்ள சமிக்ஞை நேற்று ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக சிவப்பு எச்சரிக்கை ஒலி எழுப்பியவாறு இயங்கியது. அதனால் வீதியால் பயணித்தவர்கள் பெரும் குழப்பமடைந்தனர்.

நேற்று மதியம் தொடருந்துக் கடவை ஒலி, ஒளிச் சமிக்ஞை தன்னிச்சையாக இயங்கியது. அதன் சிவப்பு நிற விளக்கு ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக ஒளிர்ந்தவண்ணம் இருந்தது. அதனால் மக்கள் தொடருந்து வருகின்றது என்று நினைத்து வீதியில் நீண்ட நேரம் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தனர்.

அதேவேளை, வடக்கில் பொருத்தப்பட்டுள்ள தொடருந்துக் கடவைச் சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து நீக்கப்பட்டவை என்று வடக்கு, கிழக்குத் தொடருந்துக் காப்பாளர் சங்கம் அண்மையில் குற்றஞ்சாட்டியிருந்தது. (எ-ரி4)

### விபத்துகளில் ஐவர் காயம்

சாவகச்சேரி, ஒக்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் நடந்த விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த ஐந்து பேர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 16ஆம் திகதி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு அருகில் கனகன்புளியடி, புத்தூர் வீதியில் முச்சக்கர வண்டியும், உந்துருளியும் விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டி குடைசாய்ந்தது; அதில் பயணித்த பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்தவரும், உந்துருளியில் பயணித்தவரும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

மந்துவிலில் நேற்று நடந்த விபத்தில் உந்துருளி நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த பெண் ஒருவரும், அவரது 2 வயது மகளும் காயமடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியில் வீதியில் திரும்பிய உந்துருளி சறுக்கியதில் அதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார். (எ-9)

### விவசாயிகளுக்கு மானிய உரங்கள்

தென்மராட்சி, ஒக்.18

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கான மானிய உர வகைகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

அன்றைய தினம் மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் வழங்கப்படும்.

மானிய உர வகைகளுக்கு முதல் கட்டமாகப் பதிவு செய்தவர்கள் உரிய பொருள்களுடன் வருகை தந்து உரவகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அமைப்பின் செயலா இ. [illegible] வேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ-9)



### ஜப்பான் தூதுவர் நேற்று கிளிநொச்சிக்கு பயணம்

கிளிநொச்சி, ஒக்.18

ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்றார். கிளிநொச்சி அறிவியல்நகரில் புதிதாக அமைக்கப்படும் விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையக் கட்டடத்தின் பணிகளை அவர் நேரில் சென்று பார்த்தார். பல்கலைக் கழகச் சமூகத்தினருடனும் அவர் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். (எ-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச தலைவர் தேர்தலில் யாருக்கும் ஆதரவில்லை

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

வவுனியா, ஒக்.18

எவர் பதவிக்கு வந்தாலும் மக்கள் மீதானதும், இயற்கைச் சூழல் மீதானதுமான அடக்குமுறைகளும் சுரண்டலும் தொடரத்தான் போகிறது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவிக்கு, ஆளும் வர்க்க கட்சிகளில் இருந்து அதிகார நாற்காலிக்கு வருவதற்கான போட்டியே அரச தலைவர் தேர்தல். இந்தப் பதவிக்கு யார் வந்தாலும் நாட்டின் மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் மோசமடைந்து காணப்படும் நெருக்கடி மிக்க வாழ்க்கை நிலைமைகள் மாறப்போவதில்லை. அதே போன்று ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையக தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகள் கிடைக்கப்போவதுமில்லை. இந்தத் தேர்தலின் முடிவுகளை ஊகிப்பது கடினமல்ல. இதில் வெல்லப்போவது ஆளும் வர்க்கமே. தோற்கப் போவது நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுமே.

மக்களின் பணத்தில் 500 கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டு நடத்தப்படும் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் எந்த அரச தலைவரானால் நாடும் மக்களும் எதிர்நோக்கும் எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு காணமுடியாது. வாக்களிப்புக்கும் அரச தலைவர் தேர்தலுக்கும் அப்பாலான, மக்களரசியலோடும், வெகுஜனப் போராட்டங்களோடும் மக்கள் தம்மை இணைத்துக்கொள்வதே உண்மையான மாற்றத்துக்கான வழிமுறையாகும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் தனியார்மயப்படுத்தலும் பல்தேசிய நிறுவனங்களின் வருகையும் நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை நாசம் செய்துள்ளன. இவற்றால் ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்து, இறக்குமதியும் நுகர்வும் அதிகரித்து, நாடு கடனில் மூழ்கியுள்ளது. இந்தக் கடனால் இலங்கைக் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஐந்து இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்குக் கடனாளிகளாக உள்ளனர்.

மக்களின் வாழ்க்கைத்தரம் கீழ் நிலைக்கு வந்துள்ளது. நாட்டில் 45 வீதத்துக்கு மேலானோர் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வோராக்கப் பட்டுள்ளனர். வேலையின்மை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தனியார்மயக் கொள்கையால் கல்வியும் சுகாதாரமும் சீரழிக்கப்பட்டுள்ளதையே காணமுடிகிறது.

நாட்டின் உழைக்கும் மக்களாகவும் ஒடுக்கப்படுவோராகவும் இருந்து வரும் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களுக்கு கடந்த காலங்கள் போன்று, எவர் வெற்றிபெற்று பதவிக்கு வந்தாலும் எவ்வித சுபீட்சமோ விமோசனமோ கிடைக்கப்போவதில்லை. அவர்கள் ஏகாதிபத்திய, பிராந்திய, மேலாதிக்க, வல்லரசு நாடுகளின் தேவைகளுக்கும் நலன்களுக்கும் ஏற்றவாறு நடந்து கொள்ளவே செய்வார்கள். இதனால் எமது கட்சி இந்த அரச தலைவர் தேர்தலில் எவரையும் ஆதரிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது-என்றுள்ளது. (எ-110)



### கை கழுவுதல் தின நிகழ்வு

பருத்தித்துறை, ஒக். 18

பன்னாட்டு கை கழுவுதல் தின நிகழ்வு பருத்தித்துறை கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலையில் நேற்றுமுன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

பிரிவு பொது சுகாதார பரிசோதகர் இ.ஜென்சன் றொனால்ட் கைது கழுவும் நுட்பங்கள் குறித்து செய்முறை விளக்கம் வழங்கியதுடன், ஒழுங்கற்ற கை கழுவுதலால் மாணவர்கள் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்புகள் தொடர்பான கருத்துரைகளையும் அவர் வழங்கினார்.

அத்துடன் கைகழுவுதல் தொடர்பான வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. (ஐ-9)

### சிறுவர் தின நிகழ்வு

தெல்லிப்பழை, ஒக்.18



தெல்லிப்பழை பிரதேச செயலகப் பன்னாட்டு சிறுவர் முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் தின நிகழ்வு கீரிமலைகருகம்பனை கலா சார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட உதவி மாவட்ட செயலர் திருமதி ச.கி.நி. கமலராஜன், மதிப்புறு விருந்தினராக பிரதேச முதியோர் சங்கத் தலைவர் வை.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுவர்,முதியோர் மற்றும் சிறப்புத்தேவை யுடையோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் பன்னாட்டு சிறுவர்,முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

### அ.இ.ம. காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கு கலந்துரையாடல்

வவுனியா, ஒக்.18

அரச தலைவர் தேர்தல் தொடர்பான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுக் காலை வவுனியாவில் நடைபெற்றது.

அமைச்சர் ரிசாத் பதியுதீனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நடைபெற்றது. அதில் அரச தலைவர் தேர்தல் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட முக்கி யஸ்தர்கள், அகிலஇலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள், மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-110)

### விதிமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்குத் தண்டம்

தெல்லிப்பழை, ஒக்.18

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் காலாவதியான பொருள்கள் விற்றமை, கூடிய விலைகளில் பொருள்களை விற்றமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் கீழ் 16 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிமன்றில் தனித்தனியாகக் குற்றப் பத் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அவர்களில் ஒருவரைத் தவிர ஏனைய 15 பேரும் மன்னார் மாவட்ட நீதிவான் மன்ற நீதிபதி மா. கணேசராஜாவிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தங்கள் மீதான குற்றச் சாட்டுக்களை ஏற்றுக் கொண்டனர்.

இறக்குமதியாளர், வழங்குநர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரி யிடப்படாத கிறீம், குளியல் சவர்க்காரம் விற்பனை செய்தவர்களுக்கு தலா 3ஆயிரம்ரூபாவும், காலாவதியான குளிர்பானம் விற்பனை செய்த ஒருவருக்கு 4 ஆயிரத்து 500 ரூபாவும், கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி மா விற்றமைக்கு 6 ஆயிரம் ரூபாவும், விலைகள் காட்சிப்படுத்தாது சிற்றுண்டி விற்றமைக்கு ஆயிரத்து 500 ரூபாவும், விலை காட்சிப்படுத்தாது சிவப்பு அரிசி விற்றவருக்கு ஆயிரத்து 500 ரூபாவும், கட்டுப்பாட்டு விலையை மீறி சிவப்பு அரிசி விற்றவருக்கு 6 ஆயிரம் ரூபாவும், விலை காட்சிப்படுத்தாது கருவாடு விற்பனை செய்தவருக்கு ஆயிரம் ரூபாவும், கட்டுப்பாட்டு விலையை மீறி வெள்ளைச் சம்பா அரிசி விற்றவருக்கு 4 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (எ-60)

### பரிசளிப்பு விழா

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரிய கல்வியலாளர் மருதையினார் தர்மசீலன் சிறப்பு விருந்தினராகவும், தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விச் செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இராஜி மயில்வாகனசிங்கம், கரவெட்டிப் பிரதேச செயலக வெளிநாட்டு வேலை வாய்ப்புக் கிளை அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவருமான சு.சுமன் ஆகியோரும், மதிப்புறு விருந்தினராக ஜே 341 கிராம அலுவலர்பிரிவின்பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேதாசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-159)



காங்கேசன்துறை, தையிட்டி வள்ளுவர்புரம் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்தக் கட்டடம் 20 இலட்சம் ரூபா நிதிச் செலவில் இரு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டடத்துக்கான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் ஒதுக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, அக்கரைப்பற்று சிறி இராமகிருஸ்ணா கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் நேற்றுக் கல்விச் சுற்றுலா மேற்கொண்டனர். அவர்கள் திருகோணமலை நகர சபையின்பொது நூலகத்தைப்பார்வையிட்டனர். (ஏ)

# கோத்தாவுக்கு எதிராக எழும் கண்டனங்கள்

கொழும்பு, ஒக். 18

சரணடைந்த எவரும் கொல்லப்படவில்லை. சடலங்களை அடையாளம் காண முடியாததால் காணாமல் போனதாக உறவினர்கள் கூறுகிறார்கள், என்று கோத்தபாய ராஜபக்ச செய்தியாளர்களிடம் கூறியிருப்பதானதைஎந்தவகையிலும்ஏற்கமுடியாதென்றும்தமிழர்களை கொச்சைப்படுத்தும் செயலென்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

காணாமல்போனோர் சம்பந்தமாக அவர் கூறிய கருத்து, உறவுகளை இழந்து தவிக்கும் உறவுகளை ஏளனப்படுத்தும் செயலாகும். சடலங்களைக் காணாததால் காணாமல்போனோர் பற்றி பேசுகின்றனரென்பது தமிழர்களை இழிவுப்படுத்துவதாக இருக்கின்றதென்றும் தமிழ்த் தலைவர்கள் தெரிவித்தனர்.

போர்க் காலத்தில் நடந்தவற்றுக்கு தான் பொறுப்பில்லை, இராணுவத் தளபதிதான் பொறுப்பு என்று கூறிவிட்டு அவர் ஒதுங்க நினைப்பது உலகத்தை ஏமாற்றும் முயற்சி என்றும்தமிழ்த்தலைவர்கள்குற்றஞ்சாட்டினர்.

**புளொட் தலைவர் த.சித்தார்த்தன்**

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய கூறிய கருத்துக்களை ஏற்க முடியாது. உண்மையில் அவர் அப்படிக் கூற முடியாது. ஏனெனில் போர்க் காலத்தில் முழுக்க முழுக்க போரை நடத்துவதில் போருக்குப் பொறுப்பாக அவரும் இருந்தவர். அப்படிக்கூறியகருத்துக்களைநாங்கள் எதிர்க்கிறோம். என்னைப் பொறுத்தவரைஅவர்அப்படித்தான் கூறுவார் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயம். இருந்தாலும் அவருடைய கூற்றை முழுமையாக நாங்கள் நிராகரிக்கிறோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவேண்டுமென்பதில் எங்களுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது.

**ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ்**

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய பத்திரிகையாளர் மாநாட்டில் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் அவரிடம் கேட்டபொழுது ஏற்கனவே13ஆயிரம்விடுதலைப்புலிகள் மறுவாழ்வளிக்ககப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் வேறு எவரும் கைது செய்யப்படவில்லை என்றவடிவத்திலும்அவர்பதில்சொல்லியிருக்கின்றார்.

அதேசமயம் அவரது தமையனான மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்தபொழுது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக ஒரு விசாரணைக்குழுநியமிக்கப்பட்டுஏறத்தாழ 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமலாக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அதுதொடர்பாகஅவர்எந்தவிதமான பதிலையும் சொல்லவில்லை என்பதையும்நாங்கள்பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

இதனைப் போன்று தமிழ் மக்கள் தொடர்பான கேள்விகளுக்கு அவரிடமிருந்துஎந்தவிதநியாயபூர்வமான பதில்களும் வரவில்லை. மாறாக இன்னுமொரு கட்டத்தில் அவர் கூறுகின்ற பொழுது இராணுவத்தை வழிநடத்தியது தான் இல்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார். மேலும் அது இராணுவத் தளபதி சம்பந்தமான விடயமென்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் முப்படைகளுக்குமான செயலராக இவர் தான் இருந்திருக்கின்றார். அது மாத்திரமல்லாமல் கடந்தகாலங்களில்பத்திரிகையாளர்களுடன் பேசுகின்ற பொழுது போர் வெற்றியடைந்ததற்கு தான் தான் காரணமென்றும் அப்போதிருந்த தமது அரசு தான் காரணமென்றும் தமது வழிகாட்டுதலில் தான் யுத்தம் வெற்றியடைந்ததாகவும்பலதடவைகள் கூறியிருக்கிறார்.

ஆனால் இப்பொழுது இராணுவத்தை தான் வழி நடத்தவில்லை என்று கூறுகின்றார். ஆகவே முன்னுக்குப் பின் முரணான வகையில் அவரது பதில் அமைந்திருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்கள் தன்னிடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றதாக தன்னுடைய ஊடக சந்திப்பில் கூறியிருக்கின்றார்.

ஆகவே அவருடைய அப் பதில்கள் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய பதில்கள் அல்ல. நிச்சயமாக அவரது பதிலின் ஊடாக தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதைத் தான் மீண்டும் மீண்டும் கூறமுற்படுகின்றார்.

**த.தே.ம.மு. தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

கோத்தபாயவின் இக் கருத்தை பச்சைப் பொய்யாகவே நாங்கள் பார்க்கிறோம். கொலைகாரன்தன்னுடைய கொலைகளை ஒரு போதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. இவரைப் போன்ற தரப்புக்களால் எங்களுக்கான நீதியை எதிர்பார்க்க முடியாது. அதேநேரம் இந்த விடயங்களில் வெறுமனே கோத்தபாய மற்றும் அவர் சார்ந்த ஒரு கட்சி மட்டும் தான் காரணம்என்றுகூறிக்கொண்டிருக்க முடியாது.

ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியும் அதனையேசெய்கின்றது. அத்தோடு அவர்கள் தப்பிப்பதற்கும் பாதுகாப்பதற்குமான செயற்பாடுகளைத் தான் முன்னெடுத்து வருகின்றார்கள். கடந்தஐந்துஆண்டுகள்ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியில் நடைபெற்ற விடயங்களை எடுத்துப் பார்த்தால் அவர்களைப் போன்றதான செயற்பாடுகளையே இவர்களும் முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

சிங்களத் தரப்பினர்கள் எண்ணங்கள் சிந்தனைகள் மாறவில்லை. அதுமாறப் போவதும் இல்லை. அதனாலேயே அவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காணாமல் போனோர் விவகாரம், சரணடைந்தவர்கள் விவகாரம், போர்க் குற்றங்கள் உள்ளிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை ஒரு குறுகியவட்டத்துக்குள்முடக்குவதற்கான செயற்பாடுகள் தான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விடயங்களை முடக்கி இதனை இல்லாமல்செய்வதுதான்அனைத்து சிங்களத்தரப்புக்களதும்நோக்கமாக உள்ளது. அதனையே அவர்கள் செய்தும் வருகின்றனர். அதற்காகப் பச்சைப்பொய்களையும் சொல்லிவருகின்றனர்.

ஆகவே பொறுப்புக் கூறல் இனப்பிரச்சினைக்கானதீர்வுஎன்றவிடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைஎடுப்பதுதொடர்பில்இந்தஇரு கட்சிகளதும்வேட்பாளர்களிடத்திலும் எந்தவிதமான நிலைப்பாடுகளும் இல்லை. இதனால் இத் தேர்தலில் தமிழ் மக்களிடம் தெரிவுகளும் இல்லை. அவ்வாறிருக்கையில் ஒரு தரப்பை எதிர்த்து மற்றத் தரப்புக்கு ஆதரவை வழங்குவதென்றநிலைப்பாட்டை எடுக்க முடியாது.

**ரெலோ செயலர் என்.சிறிக்காந்தா**

இந்த விவகாரத்தில் எங்கள் நிலைப்பாடு குறித்து தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த விடயத்தில்புதிதாகத்தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் நாங்கள் எங்களுடைய13கோரிக்கைகளோடு அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான வேட்பாளர்களோடும் அவர்கள் சார்ந்த கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க இருக்கின்றோம்.

இந் நிலையில் அவசரப்பட்டு எந்த கருத்தையும் நாங்கள் தெரிவிக்க விரும்பவில்லை. ஏனெனில்எங்கள் கோரிக்கைகளிலே இந்த விடயங்களும்அடங்கியிருக்கின்றது. ஆகவே நேரடியாக நாங்கள் சம்பந்தப்பட்ட வேட்பாளர்களோடு பேச்சுக்களை நடத்திய பிறகு நாங்கள் ஒரு முடிவிற்கு வருவோம்- என்றார். (ஒ.5)

## சஜித் பிரேமதாசாவுக்காக 151 பரப்புரைக் கூட்டங்கள்

### அகில விராஜ் தெரிவிப்பு

எமது புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச களமிறங்கியிருக்கும் நிலையில் நாடு முழுவதும் 151 தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கின்றோம். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும்வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கின்றார். இவ்வாறுஐக்கிய தேசியக்கட்சியின்பொதுச் செயலரும், கல்விஅமைச்சருமான அகில விராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் தாமே போரைமுன்நின்றுநடத்தியதாகக்கூறிவந்தகோத்தபாய ராஜபக்ச அண்மையில்இடம்பெற்றசெய்தியாளர் சந்திப்பில், தான் போருக்குத் தலைமை தாங்கவில்லை என்பதையும், பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவே போரை வழிநடத்தினார் என்பதையும் ஏற்றுக்கொண்டார்.

ஏதேனுமொருவிடயத்தில் தவறுகள் ஏற்பட்டால் அதன்பொறுப்பைஐக்கிய தேசியக் கட்சியின் மீது சுமத்துவதையும், சிறந்த விளைவுகள் ஏற்பட்டால் அதற்கான பாராட்டு முழுவதையும் தமதாக்கிக் கொள்வதையுமே மகிந்த தரப்புதொடர்ச்சியாகசெய்துவருகிறது.

அரச பணியாளர்களுக்கு இதுவரை காலமும் எந்தவொருஅரசும், நாம்வழங்கியதைப் போன்ற வசதிகளையோ, சலுகைகளையோவழங்கவில்லை. 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசை அமைத்ததுமே அரச பணியாளர்களின்சம்பளத்தைஉடனடியாக அதிகரித்தோம்.

கடந்த அரசு பெற்றுக் கொண்ட கடன்களை மீளச்செலுத்த வேண்டிய நெருக்கடியான நிலையொன்று காணப்பட்ட போதிலும், நாம் நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம்.

கடந்தகாலத்தில்அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்த சமுர்த்திக்கொடுப்பனவை எமது அரசு பதவியேற்ற பின்னர் அனைவருக்கும் நியாயமான முறையில் பெற்றுக்கொடுத்ததுடன், சமுர்த்திக் கொடுப்பனவுத்தொகையை அதிகரித்தோம்.

எனது அமைச்சின் கீழ் சிறுவர்களின் ஆரோக்கியத்தைவலுப்படுத்துவதற்கான கொடுப்பனவை வழங்கும்திட்டத்தைஆரம்பித்தோம். மேலும் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைதிட்டம், சுரக்ஷா காப்புறுதித்திட்டம், பாடசாலைகளுக்கான புதிய கட்டட நிர்மாணம், தொழிற்பயிற்சிவழங்கல்உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன், அவற்றைத்திறம்படநடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இவையனைத்தையும் விட 2015 ஆம் ஆண்டில் நாம் வெற்றிபெற்றதன் மூலம் நாட்டின் ஜனநாயகத்தையும், மக்களின் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தினோம்.

அதனைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டிய நிலையிலேயே தற்போது நாமனைவரும் இருக்கின்றோம். இம்முறை அரச தலைவர் தேர்தலில் நாடா அல்லது குடும்பமா என்ற தெரிவை மக்கள் மேற்கொள்ள வேண்டும். தபால்மூலமான வாக்கெடுப்பு இன்னும் சில நாள்களில் நடைபெறவுள்ள நிலையில் அரச பணியாளர்கள்அனைவரும்எமது அரசால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த திட்டங்களை மனதிலிருத்தி அன்னம் சின்னத்துக்குவாக்களிக்க வேண்டும்- என்றார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி கிழக்கில் நேற்று திடீரென வீசிய சுழல்காற்று

வடமராட்சி, ஒக்.18
வடமராட்சி கிழக்கு, மாமுனையில் நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட திடீர் சுழல்காற்றில் நாகதம்பிரான் ஆலய அன்னதான மடம் மற்றும் பனை அபிவிருத்திச் சபைக் கட்டடம் என்பற்றின் கூரைத் தகடுகள் அள்ளுண்டு சென்றன.
நேற்று முற்பகல் 11 அளவில் வீச ஆரம்பித்த சுழல்காற்று சுமார் அரை மணிநேரம் நீடித்தது.
அன்னதான மடத்தின் கூரை, பிளாஸ்ரிக் தண்ணீர் தாங்கி என்பன சூழல் காற்றால் பல மீற்றர் தூரத்துக்கு அள்ளுண்டு சென்றன. கோயிலுக்கு அருகில் இருந்த வேப்பமரமும் அடியோடு சரிந்தது.
அன்னதான மடத்துக்குள் இருந்த பூசகரின் தலையில் கூரைத் தகடுகள் விழுந்ததால் அவர் காயமடைந்தார். அவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.



பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் அ.சா.அரியகுமார், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று ஏற்பட்ட சேதவிவரங்களைப் பார்வையிட்டனர். (எ-173)

# ஷங்கரின் பன்னாட்டு சிறுவர் போட்டிகள்

ஷங்கரின் பன்னாட்டு சிறுவர்போட்டிகள்எதிர்வரும் நவம்பர் மாதம் 23 ஆம் திகதி சுவாமி விவேகானந்த கலாசார நிலையம் கொழும்பு 7 இல் காலை 9.30 மணி தொடக்கம் ஒரு மணி வரைநடைபெறவுள்ளன. இந்தியாவின்முதலாவது தலைமைஅமைச்சர்ஜவஹர்லால் நேருவின் பிறந்த தினத்தை நினைவுகூரும்முகமாக இந்தப் "ஷங்கரின் பன்னாட்டுச் சிறுவர்போட்டிகள்" நடைபெறவுள்ளன. இந்தியத் துதரகத்தின் கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
இங்கு நடைபெறும் வர்ணம் தீட்டுதல், ஓவியம், எழுத்து ஆகிய போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு நாடு முழுவதுமுள்ள சிறுவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தப்போட்டிகளுக்கானதலைப்பு'எமக்குள்ளஒரேயொருவீடான பூமியை பாதுகாப்போம்' என்பதாகும்.
2004ஆம்ஆண்டுஜனவரி 01 ஆம் திகதியன்று அல்லதுஅதற்குபின்னர் பிறந்தசகலசிறுவர்களும் இந்த போட்டிகளில் கலந்துகொள்ளமுடியும். இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் சிறுவர்கள் தமது பெயர் விவரங்களை நிலையத்தின் 0112684698 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டுவழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மரம் முறிந்து விழுந்து ஓட்டோ, வீடு சேதம்



கொழும்பு, ஒக்.18
லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணிவத்தை பேரம் தோட்டத்தில் கடும் மழை மற்றும் பலத்த காற்று வீசியதால் பெரும் மரம் ஒன்று முறிந்து விழுந்தது. அதற்குள் சிக்கி வீடு ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் சேதமாகியுள்ளன.
முறிந்து விழுந்த மரத்தை அற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மலையகத்தில் பெய்துவரும் தொடர் மழையால் அங்கு மண் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. (எ)

# உரையாற்றாது சென்ற அரச தலைவர் மைத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 18
பன்னாட்டு வானூர்தி நிலையத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றாது நிகழ்விலிருந்து வெளியேறி னார்.
யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் மேடை நிகழ்வுகள், அருகில் இடம்பெற்றிருந்தன. நிகழ்ச்சி நிரலில் அரச தலைவரின் உரை உள்ளடக்கப்பட்டிருந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றி முடிந்ததும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திடீரென எழுந்து சென்றார். இதனையடுத்து, நன்றியுரை இடம்பெற்று நிகழ்வு முடிவுக்கு வந்தது. (ஒ.5,105)





# 'டெங்கை ஒழிப்போம்' விழிப்புணர்வுப் பேரணி

தெல்லிப்பழை, ஒக்.18
தெல்லிப்பபழை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச பாடசாலைகளின் 'டெங்கை ஒழிப்போம்' எனும் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று தெல்லிப்பழைப் [illegible] தலைமையில் இடம்பெற்றது.
பிரதேசததல [illegible]
பிரதேச செயலர் ச.சிவசிறி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)

# கோத்தாவின் பேச்சு நழுவும் சம்பந்தன்

கொழும்பு, ஒக். 18
இறுதிப் போர் தொடர்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பில் இந்தத் தருணத்தில் நான் எதையும் கூற விரும்பவில்லை. அவர்களது தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் அனைத்துக்கும் பதிலளிப்பேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை இரண்டு தினங்களுக்கு முன்னர் சந்தித்திருந்தார். இறுதிப் போர் தொடர்பில் ஊடகவியலாளர்களால் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. இதற்குப் பதிலளித்திருந்த அவர், இறுதிப் போரை நான் வழிநடத்தவில்லை. சரணடைந்தவர்கள் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்று இறுதிப் போர் தொடர்பில் அவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளிலிருந்து நழுவும் வகையில் கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார். இவ்விடயம் தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவிய போதே அவர்மேற்கண்டவாறுகூறியுள்ளார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு தமிழ்க் கூட்டமைப்பு அழுத்தம் கொடுக்கவில்லை!

## சிங்களப் பத்திரிகைச் செய்தியை மறுக்கின்றார் மங்கள

கொழும்பு, ஒக்.18

சிங்களக் கிராமங்கள் மற்றும் விகாரைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று எம்மிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருப்பதாக சிங்களப் பத்திரிகையொன்றில் வெளியாகியிருக்கும் செய்தி முற்றிலும் பொய்யானதாகும். இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச அரசைப் போன்று நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியை ஒருபோதும் பெற்றுக்கொண்டதில்லை. புலிகளிடம் திரைமறைவில் நிதி பெற்று மகிந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றதைப்போன்றுநாம்செயற்பட்டதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு தொடர்பில் நாம் எமது தேர்தல் விஞ்ஞாப னத்துடன் பகிரங்கமாக வெளியிடுவோம்.

எம்முடைய தேர்தல் அறிக்கையை எதிர்வரும்நவம்பர்மாதம்முதலாம் திகதி வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருக்கிறோம். அதனூடாக பிளவுபடாதஒருமித்தநாட்டுக்குள்எவ்வித இன, மதபேதங்களுமின்றி அனைவரையும் ஒற்றுமையுடன் வாழச் செய்வதற்கான சஜித் பிரே மதாஸவின் தூரநோக்கு சிந்தனையை விளங்கிக்கொள்ள முடியும்.

அதேபோன்று மறுபக்கத்தில்கோத்தபாய ராஜபக்ச, இராணுவத்தினரைப்பாதுகாத்தஒருவரைப்போன்று சித்தரிப்பதற்கு முயற்சிக்கின் றார்கள். ஆனால், உண்மையில்கோத்தபாய ராஜபக்ச என்பவர் நாட்டில் போர்உக்கிரமடைந்திருந்தவேளையில் நாட்டைவிட்டுத் தப்பிச்சென்ற ஒருவராவார் என்றார். (எ-22)

## பரிசளிப்பு நிகழ்வு

மருதங்கேணி, ஒக்.18

யாழ்ப்பாணம வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் காலை 9 மணியளவில் அதிபர் சு.கணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ் தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து வரவேற்பு நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து தலைமை உரையினை பாடசாலை அதிபருமான ச.கணேஸ்வரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாணவர்களான ந.லதுர்சியாவின் தனி நடனமும், ஆ.அபினாஸ் து.துளசிகா ஆகியோரின் குறவன் குறத்தி நடனமும், பா.தஸ்மியாவின் ஆங்கில பாடலுக்கான தனி நடிப்பும், தரம் ஆறு மாணவர்களின் மயிலாட்டம் நிகழ்வு, நாட்டார் பாடல், கிராமிய நடனம், சிங்கள பாடல் கவிதை உட்பட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தின ராக வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் யோ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக முதன்மைக் கணக்காளர் சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து பாடசாலை மட்டத்திலும், கோட்ட, வலய மட்டங்களில் சாதனை படைத்த மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-160)

## பாடசாலை மாணவர்களுக்கு முதியோர் பற்றி கருத்தமர்வு

மன்னார். ஒக்.18



நானாட்டான் பிரதேச செயலகத்தின் சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் அலுவலர் ஏற்பாட்டில் நானாட் டான் டிலாசால் கல்லூரி மாணவர்களுக்கு முதியோர் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

முதியோர் தொடர்பான கருத்துக்களை நானாட்டன் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமாரும், முதியோர் ஆரோக்கியம், சுகாதாரம் தொடர்பாக மன்னார் மாவட்ட மருத்துவமனை மருத்துவர் சத்திபாலனும், முதியோர் தொடர்பான சமூகப் பொறுப்புக்கள் பற்றிப் பிரதேச செயலகத்திக் சிறுவர் பராமரிப்பு அலுவலர் அகிலன் செய்சாவும் கருத்துக்களை வழங்கினர்.

இந்தக் கருத்தரங்கில் 200 மாணவர், மாணவியர் பங்குபற்றினர். (எ-213)

## முல்லை. மாந்தை கிழக்கில் மின்னல் தாக்கம் அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தைகிழக்கு பிரதேசத்தில் அண்மைக் காலமாக மின்னல் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். விவசாயத்தினையும் கால்நடையினையும் ஜீவனோபாய தொழிலாக கொண்ட கிராமங்களாக மாந்தை கிழக்குக் கிராமம் காணப்படுகின்றது. இந்த கிராமத்தில் அவ்வப்போது மின்னல் தாக்கம் அதிகரித்துக்காணப்படுகின்றன.

கடந்த சில நாள்களாக தொடர்சியாக பெய்து வரும் மழையை அடுத்து மின்னல் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது. நேற்றுமுன்தினம் நான்காம் வாய்க்கால் பகுதியில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி 15 வரையான தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளன. இடிதாங்கி ஒன்றை அமைத்து கொடுக்குமாறு பலதடவைகள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் பலன் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ-ரி3)

## வாசிப்பு மாதத்தில் பல்வேறு போட்டிகள்

சாவகச்சேரி, ஒக்.18

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் பாடசாலை வகுப்பு ரீதியாக இரு மாணவர்கள் பங்குபற்றலாம். போட்டிக்கான விண்ணப்பங்களை நாளைமறுதினத்துக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை விட வாசகர்களுக்கிடையிலான போட்டிகளையும் நடத்தவுள்ளனர்.

போட்டிகளின் விபரம் வருமாறு. நாளை மறுதினம் 20 ஆம் திகதி தரம் 1மாணவர்களுக்கு கதை கூறல், தரம் 2 மாணவர்களுக்கு வாசிப்பும் இடம் பெறும்.

22 ஆம் திகதி தரம் 4 மாணவர்களுக்கு வாசிப்பு, தரம் 10,11 மாணவர்களுக்குக் கட்டுரையும் இடம்பெறும்.

23 ஆம் திகதி தரம் 5 மாணவர்களுக்கு விநாடி வினா, தரம் 8 மாணவர்களுக்கு கட்டுரையும், 24 ஆம் திகதி தரம் 12,13 மாணவர்களுக்குக் கட்டுரையும், 25 ஆம் திகதி தரம் 9 மாணவர்களுக்கு கட்டுரையும், 26 ஆம் திகதி தரம் 3 மாணவர்களுக்கு வாசிப்பும், தரம் 7 மாணவர்களுக்கு ஆங்கிலம் வாசிப்பும் இடம்பெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தரம் 6 மாணவர்களுக்கு வாசிப்பு போட்டிகளும், மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி 27 ஆம் திகதியும், மாணவர்களுக்கிடையிலான சஞ்சிகை தயாரித்தல் விண்ணப்ப முடிவுத் திகதி 22 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சுவர்ச் செய்தித்தாள் போட்டி 22 ஆம் திகதி நடைபெறும். வாசிப்பு பொன் போன்றது என்னும் தலைப்பில் பாடசாலை மாணவர்கள் மூடிய பிரிவிலும் வாசகர்கள் திறந்த பிரிவிலும் பங்குபற்றலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# முல்லையில் வெடியில் சிக்கும் யானைகள்; காப்பாற்றுவதற்கு முன்வராத அதிகாரிகள்

## மக்கள் கடும் விசனம்

முல்லைத்தீவு, ஒக். 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகள் வெடிகளில் சிக்குண்டு, காயமடைகின்ற சம்பங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு இலக்கு வைக்கப்படும் யானைகள் காயமடைந்த நிலையில் குடியிருப்புக்கள், மற்றும், விவசாயக் காணிகளுக்குள் சென்று அங்கிருக்கும் மக்களை அச்சுறுத்திவருகின்றன. உடையார் கட்டு இருட்டு மடுவில் காட்டுயானை ஒன்று நேற்றையதினம் இவ்வாறு மக்களை அச்சுறுத்தியுள்ளது. முல்லைத்தீவு உடையார் கட்டு இருட்டுமடுப்பகுதியில் வெடியில் சிக்கி பாதிக்கப்பட்ட காட்டுயானை நேற்று அதிகாலை குடியிருப்பு பகுதிக்குள் சென்று மக்களை அச்சுறுத்தியது. பின்னர், பாலகுமார் என்பவரின் வீட்டு தோட்ட காணிக்குள் புகுந்து அட்டகாசம் செய்தது என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு யானை அட்டகாசத்தில் ஈடுபடுவது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னரும் முல்லைத்தீவில் இவ்வாறு வெடியில் சிக்கிய ஒரு காட்டு யானை மக்களை அச்சுறுத்திவந்தது. அது தொடர்பில் மக்கள் சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்த யானை இறந்தது. இறந்த யானையின் தந்தங்கள் வெட்டி எடுக்கப்பட்ட சம்பங்களும் இடம்பெற்றிருந்தன. முல்லைத்தீவில் இவ்வாறு யானைகள் வெடியில் சிக்குண்டாலும், அவை வெங்காய வெடியில் சிக்குண் டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு வெங்காய வெடியில் சிக்கும் யானைகள் காப்பாற்றப்படாது உயிரிழக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. யானைகள் உயிரிழந்தவுடன் அவற்றின் தந்தங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. இந்தச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிகாரிகள் உரிய நேரத்துக்கு வருகை தராதது, யானைகள் இறந்த பின்னர் தந்தங்கள் கொள்ளையடிக்கப்படுவது தொடர்பில் மக்கள் விசனம் தெரிவித்தனர். (ஐ-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்களை அதிக நாள்கள் தக்க வைப்பதற்கு முடியாது

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.18

பொய்யை அதிகநாள்கள்தக்கவைக்கமுடியாது. ஒரு நாளில் உண்மை வெளிவந்தே தீரும் என்று புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியால் நேற்றுமுன்தினம் தொடன்கஸ்லந்த பிரதேசத்தில் நடத்தப்பட்ட பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை நானோ அல்லது என்னுடைய சகோதரனோ வழி நடத்தி வெற்றிபெறச் செய்யவில்லை. அதற்கான தலைமைத்துவத்தை நாங்கள் வழங்கவில்லை.

இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவே போரை வழிநடத்தி, அதற்கான தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதை கோத்தபாய ராஜபக்ச அவராகவே ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

உண்மையில்இராணுவத்தினரைப் பாதுகாக்கவேண்டும்என்றுகருதும் ஒருவர், போரின் பாதிப்புக்கள் தொடர்பான கேள்விக்கு 'எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நான் இதற்குப்பொறுப்புக்கூறமாட்டேன்' என்றுநழுவமாட்டார். இதுவாசிறந்த தலைமைத்துவம்?. இதுவாஇராணுவத்தினரைப் பாதுகாக்கும் தலைமைத்துவம்?.

போர்ப் பாதிப்பைப் பற்றிக்கேட்டவுடன் கோத்தபாய ராஜபக்ச சரத் பொன்சேகாவை நோக்கி பந்தைக் கைமாற்றிவிட்டார்.

ஆனால் அவரைப் போன்று பந்தைக் கைமாற்றுபவன் நானல்லன். நாட்டின் தலைவன் என்ற ரீதியில் இராணுவத்தினரின் நலனுக்காக எவ்வித அர்ப்பணிப்பையும் செய்யத் தயாராக இருக்கின்றேன்.

அரசதலைவர்தேர்தலில்தேர்தலில் கோத்தபாயராஜபக்ஷமேஜர்ஜெனரல் 5 பேரையும், பிரிகேடியர் 5 பேரையும், கேணல் ஒருவரையும், கப்டன் தரத்திலுள்ள இருவரையும் 24 மணிநேரத்துக்குள் பதவியிலிருந்துநீக்கினார். அத்தகையஒருவரால் எவ்வாறு நாட்டை முன்நிறுத்தி நியாயமாக செயற்பட முடியும்?

கோத்தபாய ராஜபக்சவால் ஏன் ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்த முடியாமல் உள்ளது?. அவரால் ஏன் ஊடகவியலாளர்களின் வினாக்களை எதிர்கொண்டு பதிலளிக்க முடியாது என்ற கேள்விக்கு தற்போது பதில் கிடைத்திருக்கிறது. அதனாலேயே செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி கேட்க முடியாத நிலையை உருவாக்கி வைத்திருந்தார்.

ஆனால் எனது சவாலுக்கு இணங்கியேனும், அண்மையில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உண்மையை கூறி விட்டார். பத்துவருடங்களின் பின்னர் அவர் உண்மையை வெளிப்படுத்தியது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்-என்றார். (எ)

# ஆட்சிக்கு வந்ததும் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.18

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கப் புதிய அரசைப் பொறுப்பேற்றதும் நடவடிக்கை எடுப்போம் என்று கிளிநொச்சியில் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

நேற்றுமுன்தினம்கிளிநொச்சியில்இரணைமடுநன்னீர் மீனவர்கள்எதிர்கொள்ளும்பிரச்சினைகள்தொடர்பான நடத்தியகூட்டத்தின்பின்னர்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் குளத்தில் மீன்பிடிப்பதற்கான அனுமதி எனது தந்தையார்அரசதலைவராகஇருந்தபோதுநான்எடுத்த முயற்சியால் விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட அன்றிலிருந்து இந்தப்பகுதிஎந்தவிதமுன்னேற்றத்தையும் அடையவில்லை.

இன்றும் அங்கு செல்லும் வீதிகள் உள்ளிட்ட பல அடிப்படைப்பிரச்சினைகளுடனேயேமக்கள்வாழ்கின்றனர். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க புதிய அரசை பெற்றுக்கொண்டதும் நடவடிக்கை எடுப்போம் -என்றார். (எ-6)

# பெரும் தோல்வியை சந்திப்பாராம் சஜித்

## அடித்துக் கூறுகின்றார் மகிந்த

கொழும்பு, ஒக்.18

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தனது பிரதேச தேர்தல் தொகுதி உள்ளிட்டதென்மாகாணத்திலும்பெரும்தோல்வியடைவார். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின்எதிர்காலதலைமுறையினருக்குசொந்தமான தேசிய வளங்களை அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தவும், விற்பனை செய்வதற்குமான அதிகாரம் 5 வருட காலம் ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்களுக்குக் கிடையாது. எமது ஆட்சியில் தேசிய உற்பத்திகள், தேசிய வளங்கள் அனைத்தும் முழுமையாகப் பாதுகாக்கப்படும்.

மக்களுக்குச்சேவையாற்றியுள்ளவரையேஅரசதலைவர்வேட்பாளராகக்களமிறக்கியுள்ளோம். கடந்த நான்கரை வருட காலமாக நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். அனைத்து விடயங்களையும் முன்னிலைப்படுத்தி சிறந்த அரசியல் ரீதியான தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ-22)

# ஐ.தே.கவின் கைக்கூலியாக செயற்படுகிறார் சந்திரிகா!

## வீரகுமார திசாநாயக்க சாடுகிறார்

கொழும்பு, ஒக்.18

முன்னாள்அரசதலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளையும், சுதந்திரக் கட்சியைப்பாதுகாப்பதற்கான அமைப்பு என்ற அமைப்பின் மூலம் கோத்தபாயவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் குழப்பங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியே செய்து மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறுசிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திசாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

சுதந்திரக்கட்சிதலைமையகத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் யாருடைய தனிப்பட்ட தேவைக்காகவும் செயற்பட முடியாது. கட்சியைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு சிலர் முன்னெடுக்கும்நடவடிக்கைகள் ஏற்புடையவை அல்ல. அவ்வாறு கட்சியைப் பாதுகாப்பதாக இருந்தால் ஏற்கனவே எடுக்கப்பட்டதீர்மானங்களுக்குஅமையவேஅதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதனை விடுத்து வேறு வழிகளில்செல்லவேண்டிய அவசியமில்லைஎன்றார். (எ-22)



# வாக்காளர் அட்டைகள் வழங்கல் இன்று ஆரம்பம்

மன்னார், ஒக்.18

மன்னார் மாவட்டத்தில் இன்று முதல் தபால் மூலவாக்களிப்புக்கான வாக்காளர் அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனிஸ்ரன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் நடக்கவுள்ள அரச தலைவர் தேர்தலில்தபால்மூலம் வாக்களிக்க 4 ஆயிரத்து 9 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கான வாக்காளர் அட்டைகளேவழங்கப்படவுள்ளன. (எ-222)

# கல்லூண்டாய் வீட்டுத் திட்டத்தை நேரில் சென்று பார்த்தார் ரணில்

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்ப்பாணத்துக்குநேற்றுமுன்தினம் வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்க கல்லுண்டாயில்புதிதாகஅமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தைச் சென்றுபார்வையிட்டார். அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றனர். கல்லுண்டாயில்மறுவாழ்வுஅமைச்சின்நிதி ஒதுக்கீட்டில் 80 வீடுகள் அண்மையில்அமைக்கப்பட்டன.

இந்த வீட்டுத் திட்டம் அண்மையில்மறுவாழ்வுஅமைச்சின் செயலாளர் சிவஞானசோதி யால் திறக்கப்பட்டு, வீட்டுத்திட்டம்பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்தவீட்டுத்திட்டத்தைப் பார்வையிடுவதற்காகநேற்றுமுன்தினம் தலைமை அமைச்சர் ரணில் சென்றார். தலைமை அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம்சித்தார்த்தன், சிவஞானம் சிறிதரன், ஈ.சரவணபவன், சிவமோகன், வடக்குமாகாண சபையின்பேரவைதவிசாளர் சி.வி.கே.சிவ ஞானம், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனால்ட் ஆகியோரும் சென்றிருந்தனர். (எ-ரி1)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பன்னாட்டு வானூர்த்தி நிலைய திறப்பு விழா காட்சிகள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கு வருகை தந்த முதலாவது பயணியாக. எயார் இந்தியா குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்வானி லொஹானி பதிவாகியுள்ளார். அதேவேளை. எயார் இந்தியா வானூர்தியை செலுத்தி வந்த வானோடிகள் இருவரையும் அடுத்த படத்தில் காணலாம். அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளை படத்தில் காணலாம்.









சென்னை வானூர்தி நிலையத்தில் நேற்றுக் காலை. யாழ்ப்பா ணத்துக்கான அலையன்ஸ் எயார் நிறுவனத்தின் வானூர்திச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது கேக் வெட்டி பணியாளர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி வானூர்தித் தளத்திலிருந்து இந்திய வானூர்தி பி.ப. 2 மணிக்கு புறப்படும்போது.

# யாழ்ப்பாணத்துக்கான சேவை பெருமை மிக்கதான தருணம்!

## எயர் இந்தியா தலைவர் புகழாரம்

சென்னை, ஒக். 18

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான வானூர்திச் சேவை ஆரம்பித்து வைக்கப்படுவது ஒரு பெருமைமிக்க தருணம் என்று எயர் இந்தியா நிறுவத்தின் தலைவரும், எயர் இந்தியா குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளருமான அஷ்வானி லொஹானி தெரிவித்துள்ளார்.



சென்னை வானூர்தி நிலையத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கான அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் வானூர்திச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

'அலையன்ஸ் எயர் நிறுவனம் சேவையில் ஈடுபடும் 55ஆவது நகரமாகவும், முதலாவது பன்னாட்டுச் சேவையாகவும் யாழ்ப்பாணத்துக்கான சேவை அமையவுள்ளது.

இந்த சேவை ஆரம்பிக்கப்படுவது பெருமைமிக்க ஒரு தருணமாகும்' என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் சுப்பையா, சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில், முதலாவது இடைநிலை வானூர்திச் சேவையாக இது இருக்கும் என்று தெரிவித்தார். (ம-ஒ.5)

## பலாலி வானூர்தி நிலையத்தை பார்க்க முண்டியடித்தனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

பன்னாட்டு வானூர்தித் தளமாக தரம் உயர்த்தப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தைப் பார்ப்பதற்கு மக்கள் முண்டியடித்தனர்.

பலாலி வானூர்தி நிலையம் இதுவரை காலமும் வான்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. வானூர்திப் பயணங்களை மேற்கொள்பவர்கள் மாத்திரம் பலாலி வானூர்தித் தளத்துக்குள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில், பலாலி வானூர்தித் தளம் சிவில் வானூர்தி போக்குவரத்து அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்தியாவின் சென்னையிலிருந்து முதலாவது வானூர்தியும் தரையிறங்கியிருந்தது.

இந்த நிலையில் வானூர்தித் தளத்தைப் பார்ப்பதற்கு பெருமளவு மக்கள் திரண்டிருந்தனர். அவர்கள் ஆவலாகப் பார்ப்பதற்குச் சென்ற போதும் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதிக்கவில்லை. (ஒ.5,21)

## நிகழ்வைக் கண்காணித்த தேர்தல்கள் ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 18

அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் தலைவர்கள் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத் திறப்புவிழாவை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி நேரடியாகக் கலந்து கொண்டு கண்காணித்தார்.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத் திறப்புவிழா அரச செலவில் இடம்பெறுகின்றது. இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள் கலந்து கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியிருந்தது. அரச தலைவர் தேர்தலை இலக்காக வைத்து அரசியல் பேசக் கூடாது என்று கூறியிருந்தது.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், நேற்றைய நிகழ்வில் நேரடியாகக் கலந்து கொண்டு கண்காணித்தார். (ஒ.5,21,105)

## யாழ்ப்பாண வானூர்தி நிலையம் உள்நுழைவு, புறப்படுகை தளமாக அறிவிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, இரத்மலானை பன்னாட்டு வானூர்தி நிலையங்களை, குடிவரவு, குடியகல்வுச் சட்டங்களின் கீழ், புறப்படுகை மற்றும் உள்நுழைவுக்கான புதிய தளங்களாக, அரசு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே அரசு மூன்று புதிய உள்நுழைவு மற்றும் புறப்படுகைத் தளங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

இதற்கான அறிவிப்பு, உள்நாட்டு மற்றும் உள்விவகார மற்றும் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தனவால் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ.5)



## வர்ணபகவானின் ஆசியுடன் தரையிறங்கியது வானூர்தி

யாழ்ப்பாணம், ஒக். 18

பலாலி பன்னாட்டு வானூர்தித் தளத்தில் முதலாவது வானூர்தி தரையிறங்கும் போது மழை கொட்டித் தீர்த்தது. அதற்கு மேலதிகமாக, வானூர்தி ஓடுபாதையின் இரு மருங்கிலும் இருந்து வானூர்தியை நோக்கி தண்ணீர் அடிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது. (ஒ.5,21)

# இந்திய -இலங்கை உறவு வானத்தை தொட்டுவிட்டது

## இந்தியத் தூதுவர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஒக். 18

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவானது தற்போது வானத்தைத் தொட்டுள்ளது - என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் தெரிவித்தார்.



பன்னாட்டு வானூர்தித் தளம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவானது தற்போது வானத்தைத் தொட்டுள்ளது. இந்த முதலாவது வானூர்திச் சேவை, இரு நாடுகளுக்கும் இடையிலான மக்கள், மக்கள் உறவுக்கான அர்ப்பணிப்பு தொடரும் என்பதற்கான மற்றொரு உதாரணமாகும்.

மக்கள் மக்கள் தொடர்பின் ஆழத்தை மேலும் வலுவாக்க வேண்டியதில் உள்ள பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் இது பிரதி பலிப்பதாக அமைகின்றது.

2015ஆம் ஆண்டு இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வருகை தந்தபோது, இந்தியாவுக்கான எதிர்காலம் குறித்த எனது கனவு எமது அயலவர்களுக்குமானது என்று கூறியிருந்தார்.

இலங்கை அரசுடன் 2015 நவம்பரில் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் பலாலி வானூர்தி நிலையத்தின் அடிப்படை கட்டமைப்பையும் ஓடுதளத்தையும் மறுசீரமைப்புச் செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டை இந்தியா வழங்கியிருந்தது.

அத்துடன் இரு தரப்பும் பிராந்திய வர்த்தக வானூர்திச் சேவைகளை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிப்பது குறித்தும் பேச்சுக்களை நடத்துகிறது - என்றார். (ஒ.5,21,105)

# அநுர குமாரவுடன் மகேஷ் இணைவு!

கொழும்பு, ஒக். 18

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான அநுரகுமார திஸநாயக்கவுடன் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் மகேஷ் சேனநாயக்க இணையவுள்ளார் என்று தகவலொன்று வெளிவந்துள்ளது.

அத்துடன் தேசிய அபிவிருத்தி முன்னணியின் வேட்பாளர் ரொஹான் பல்லேவத்தவும் அநுரவுடன் இணையவுள்ளார் என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உடன்பாட்டுக்கு அமையவே குறித்த வேட்பாளர்கள் இருவரும் போட்டியில் இருந்து பின்வாங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் தினங்களிலும் இதுகுறித்து முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் வெற்றிபெற்றால் அநுரகுமாரவை ஆதரித்து ஏனைய இருவரும் பரப்புரைகளை முன்னெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவினது உறுப்பினர்கள் பெரமுனவுடன் இணைவார்கள்

## டலஸ் எம்.பி சொல்கிறார்

கொழும்பு, ஒக். 18

ஐக்கிய தேசிய கட்சியின் பிரபல உறுப்பினர்கள் பலர் எதிர்வரும் தினங்களில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றில் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் தினங்களில் ஐக்கிய தேசிய கட்சியின் பிரபல உறுப்பினர்கள் எம்மோடு இணையவுள்ளனர். அதனால் அவர்களுக்கு தற்போது உள்ள பலத்தினையும் தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஐக்கிய தேசிய கட்சி சரிவுப் பாதையில் செல்வதை கட்சி ஆதரவாளர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சேறு பூசும்நடவடிக்கைகளைமேற்கொண்டு, அவரது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சிறைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுஐ.தே.கவின் சரிவைச் சரி செய்ய முடியாது - என்றார். (ம)

### சு.க.தலைமையகத்தை நாங்கள் கைப்பற்றுவோம்

#### குமார வெல்கம மிரட்டல்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க, முதலில் கொழும்பு டார்லி வீதியில்உள்ளகட்சியின் தலைமையகத்தை கைப்பற்ற போவதாகவும், அதனை ஜனநாயகரீதியாகசெய்யபோவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்குமாரவெல்கமதெரிவித்துள்ளார்.

சிறிலங்காபொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளிப்பதுஎனஎடுக்கப்பட்ட தீர்மானம் சுதந்திரக் கட்சியைஅழிக்கும்சூழ்ச்சி. சுதந்திரக்கட்சியைமீண்டும் கட்டியெழுப்புவதற்காகதொகுதிஅமைப்பாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தப்படும். பொதுமக்கள் முன்னணிக்கு ஆதரவளிப்பது என்பது சூழ்ச்சியாளர்களின்கட்சியை அழிக்கும் அருவருப்பானநடவடிக்கை.என்றார் குமார வெல்கம. (ஒ,5)

# பிரியங்க பெர்ணான்டோவின் வழங்கு இன்று விசாரணைக்கு

கொழும்பு, ஒக். 18

லண்டனில் உள்ள தமிழர்களுக்கு கழுத்தை அறுப்பதாக அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள இனப்படுகொலைக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பன்னாட்டு நிலையம், 'இந்த ஆண்டு ஜனவரி மாதம் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக வெஸ்ட்மின்ஸ்டர் நீதவான் நீதிமன்றத்தால் இரண்டு குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டபோதும் அவர் விசாரணைக்கு முன்னிலையாகவில்லை.

கடந்த 2018ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தின வைபவம், பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றபோது, அந்த அலுவலகத்திற்கு வெளியில் புலம்பெயர் தமிழ் மக்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இதன்போது, ஆர்ப்பாட்டங்காரர்களை அச்சுறுத்தும் வகையில் உயர்ஸ்தானிகர் அலுவலக மேல் மாடியிலிருந்து பிரிகேடியர்பிரியங்கபெர்ணாண்டோ சைகை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பாக எச்சரிக்கை மற்றும் மன உளைச்சலை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு எதிராக காணொளிகள் மற்றும் புகைப்படங்களை வைத்து தமது அமைப்பு சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன் பின்னர் வருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையும் பிரித்தானிய வெளியுறவுத்துறை தலையீட்டின் பின்னர் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

குறிப்பாக பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் இந்த அச்சுறுத்தும் செயற்பாடு அவருக்கு வழங்கப்பட்டிருந்த இராஜதந்திர பணிக்கு உட்பட்டது அல்ல என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெஸ்ட்மின்ஸ்டர்நீதவான்நீதிமன்றம் இன்று இந்த வழக்கை ஒரு சுருக்கமான விசாரணைகளைமேற்கொள்ள தீர்மானித்துள்ளது. (ம)

# தமிழ் பேசும் ஆளுநர்களே வரவேண்டும் நிலமையை உருவாக்கியமைக்கு நன்றி

## வடக்கு ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன என்னை முதலாவது தமிழ் பேசும் ஆளுநராக வடக்கு அனுப்பியது மட்டுமல்லாது, இனிமேல் தமிழ் பேசும் ஆளுநர்கள்தான் வரவேண்டும் என்ற நிலமையை உருவாக்கியுள்ளார். அதற்கு நான் நன்றி கூறுகின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை திறந்து வைத்த பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தையும் வரலாற்றையும் மாற்றியமைக்கும் காலைப் பொழுதாக இருக்கும்.

இந்த முயற்சிக்கு தோள் கொடுத்த அனைவரையும் இந்த வெற்றியின் பங்கு சேரும். பன்னாட்டுச் சமூகம் எங்களைத் திரும்பிப் பார்க்கின்ற இடமாக மாறப் போகின்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்கலாமா இல்லையா என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தவிசாளரிடம் நான் கேட்டிருந்தேன். நான் இதில் பங்குபற்றலாம் என்று கடிதம் அனுப்பியுள்ளார். மற்றவர்கள் பற்றி எனக்குத் தெரியாது.

மாற்றுக் குடிநீர்த் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டமைக்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் சார்பில் நன்றிக் கடன் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நீங்கள் என்னை முதலாவது தமிழ் பேசும் ஆளுநராக மட்டுமல்ல, இனிமேல் தமிழ் பேசும் ஆளுநர்தான் வரவேண்டும் எனும் நிலையை உருவாக்கியுள்ளீர்கள். இனிவரும் காலங்களில், என்னுடைய பதவிக் காலம் 4 மாதங்கள்தான் என்று அநேகர் கூறுகின்றனர். அது அப்படியிருக்கட்டும் பரவாயில்லை. இனிவரும் எல்லா தலைவர்களும் தமிழ் மக்களுடைய உண்மையான ஆதங்கங்களையும், அவர்களுடைய ஆன்மாவிலிருக்கின்ற கேள்விகளுக்கும் பதில்சொல்லும்தலைவராக இருக்கவேண்டும் நிலமையைஉருவாக்கியதற்கு நன்றி-என்றார்.(ஒ,5,21,105)



# மின்சாரம் தாக்கி இருமாடுகள் சாவு

கிளிநொச்சி,ஒக்.18

மின்சாரம் தாக்கி இரு மாடுகள் உயிரிழந்தன. மாடுகளை காப்பாற்ற முயன்ற உரிமையாளர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் மழை பெய்துள்ளது. இதன்போது வீதி அருகில் அமைந்துள்ள மின்மாற்றி (ரான்ஸ்போமர்) யிலிருந்து மின் ஒழுக்கு ஏற்பட்டு தரையில் மின்சாரம் பாய்ந்துள்ளது. இதன்போது அப்பகுதியால் சென்ற மாடுகள் இரண்டை மின் தாக்கியதில் அவை உயிரிழந்தன. கண்முன்னே மாடுகள் இறப்பதை அவதானித்த உரிமையாளர், அவற்றைக் காப்பாற்ற முற்பட்டபோது அப்பகுதியில் உள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் நின்ற பொலிஸார் அவரை தடுத்து நிறுத்தினர். உயிரிழந்த மாடுகளின் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்!

வெடுக்குநாறி ஆலயத்துக்கு எதிராக வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வெடுக்குநாறி மலைப் பகுதியில் இரும்பால் அமைக்கப்பட்ட படிக்கட்டுத் தொடர்பிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாறி மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள்திணைக்களத்துக்குத் சொந்தமானவை எனத் தெரிவித்து ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கபட்டதுடன் ஆலயவளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு தொல்பொருள் திணைக்களம் மற்றும் போலிசாரால் தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில் வெடுக்குநாறி மலையில் பக்தர்கள் ஏறுவதற்கு வசதியாக இரும்பினால் அமைக்கபட்ட ஏணிப்படி ஒன்று அப்பகுதி மக்களால் அண்மையில் பொருத்தப்பட்டது. குறித்த ஏணிப்படி பொருத்தியமைக்குஎதிராகதொல்பொருள்திணைக்களத்தால் ஆலய நிர்வா கத்துக்கு எதிராக நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் இம்மாத முற் பகுதியில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆலய நிர்வாகத்தினரை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்கு வருகை தருமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையில் தற்போது குறித்த விடயம் தொடர்பாக வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர ஆலயத்தின் நிர்வாகம், மற்றும் பூசகருக்கு எதிராக தொல்பொருள் திணைக்களத்தால் வவுனியா நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்காக முன்னிலையாகுமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

வவுனியாவில் கடந்த 9ஆம் திகதி சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய கேதீஸ்வரன் சுவேந்திர பிரகாஸ் என்ற முச்சக்கரவண்டிச் சாரதியின் சடலம் எரியூட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில் வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் வைத்து சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது குறித்த நபர்தானே தனிநபராக முச்சக்கரவண்டிச் சாரதியைக் கொன்றதை ஏற்றுக்கொண்டார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த முச்சக்கர வண்டிச் சாரதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி மற்றும் அவர் அணிந்திருந்த மோதிரம் என்பவற்றுக்காகவே கொலை செய்தேன். ஏற்கனவே கடந்த 7ஆம் திகதி கொலைசெய்ய திட்டம் தீட்டி நெடுங்கேணிக்கு அழைத்துச் சென்றேன். எனினும் அன்றையதினம் கொலைசெய்ய முடியாமல் போனதால் மீண்டும் கடந்த 9ஆம் திகதி ஓமந்தை கள்ளிக்குளம் காட்டுப்பகுதிக்கு அழைத்துச்சென்று இரவு 8 மணியளவில் அவரைக் கொன்றேன்.

முச்சக்கர வண்டிச் சாரதியின் கழுத்தினை கத்தியால் வெட்டியபோது கத்தி இரண்டாக முறிந்துள்ளது. அதன் பின்னர் சாரதி தப்பித்துச் சென்றபோது அவரை துரத்திச்சென்று கழுத்தை நெரித்துக் கொலை செய்தேன். எனது கைரேகை அவரின் உடலில் பதிந்தமையினால் முச்சக்கரவண்டியின் எரிபொருளை போத்தல் ஒன்றில் எடுத்து அவர் மீது ஊற்றி எரித்த பின்னர் அங்கிருந்து தப்பித்து காலி, அம்பாறை, நுவரேலியா, மாத்தறை போன்ற பல பகுதிகளுக்கு சென்று தலைமறைவாக இருந்தேன். தங்கச் சங்கிலி மற்றும் மோதிரம் என்பனவற்றை மாத்தறை பகுதியில் மறைத்து வைத்துள்ளேன் என்ற சந்தேக நபர் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கொலை செய்யப்பட்டவரின் ஆறு கடனட்டை மற்றும் நுழைவிசைவு, அடையாள அட்டை, பணப்பை, முச்சக்கரவண்டி ஆவணங்கள், இரு அலைபேசிகள், கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கத்தி, இடுப்புப் பட்டி என்பற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

## பயணிகள்...

வழக்கமான பயணிகள் வானூர்தி சேவை வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் இடம்பெறும் என்று சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்துக்கும் சென்னை வானூர்தி நிலையத்துக்கும் இடையிலான பயணிகள் வானூர்தி சேவை, நவம்பர் முதலாம் திகதியிலிருந்தே ஆரம்பமாகும் என்றும், சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக, எதிர்வரும் 27ஆம் திகதி சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## யாழ்ப்பாணத்தின்...

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்துக்கு இன்று வரலாற்று முக்கியத்துவமான ஒரு நாளாகும். முதலாவது பன்னாட்டு வானூர்தி நிலையம் இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வானூர்தி நிலையத்தை அமைக்க வேண்டும் என்று ஒரு வருடமாக அல்ல, கடந்த இருபது முப்பது ஆண்டுகளாகவும் போருக்குப் பின்னரும் பேசிக்கொண்டு இருந்தனர். ஆனால் அனைத்துமே பேச்சுகளுடன் நின்று விட்டன. எனினும் நாம் கடந்த ஆண்டே இது குறித்து பேச்சு நடத்தினோம்.

**முட்டுக்கட்டை**

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதலில் நாம் இது குறித்து பேச ஆரம்பித்தோம். ஆனால் இந்த ஆண்டு ஜனவரி மாதமே நாம் இதனை மறுசீரமைக்கும் நடவடிக்கையை முன்னெடுத்தோம். பலாலி வானூர்தி நிலையத்தை நிர்மாணிக்க வேண்டும் என்ற விடயத்தில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அதிக அக்கறை செலுத்தினார். அதற்கமைய கடந்த ஆண்டு மே மாதம் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தார். எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து இவ்வாறான ஒரு அமைச்சரவை பத்திரம் வேண்டுமா? இதனை செய்ய முடியுமா என கேள்வி எழுப்பினர். ஆனால் அரசாக நாம் எடுத்த பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் ஆறு மாத காலத்துக்குள் முதற்கட்ட நடவடிகைகளை பூர்த்தி செய்துள்ளோம்.

**அபிவிருத்தி**

இன்று அதன் விளைவாக பன்னாட்டு வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இது முதற்கட்ட வேலைத்திட்டம் மட்டுமேயாகும். இரண்டாம் கட்டமாக ஓடுபாதையை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக ஏ 320 வகையிலான வானூர்திகளைத் தரையிறக்கவும் முடியும். அவ்வாறு செய்தால் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்தும், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தும் வானூர்திகள் பலாலி வானூர்தி நிலையத்தை வந்தடையும் வாய்ப்புகள் ஏற்படும். இதுவே எமது அடுத்தகட்ட அபிவிருத்தியாக அமையும்.

**புரட்சி**

இந்த வானூர்தி நிலையத்தை உருவாக்க கோடிக்கணக்கான அல்லது மில்லியன் டொலர்களை நாம் செலவழிக்கவில்லை. ஒரு சில மாதங்களில் இதற்கான கட்டடங்களை அமைத்துள்ளோம். இதற்கு செலவழித்த பணத்தை ஒரு வருடத்தில் பெற்றுகொள்ள முடியும். இந்த வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்ததன் மூலமாக எமக்கு இன்னுமொரு பன்னாட்டு வானூர்தி நிலையம் கிடைத்துள்ளது. யாரும் நினைக்காத வேலையொன்றை நாம் செய்துள்ளோம். அது மட்டும் அல்ல இந்த வானூர்தி நிலையம் உருவாக்கப்பட்டதன் மூலமாக யாழ்ப்பாணதின் பொருளாதார வளர்ச்சியில் புதிய புரட்சி ஒன்று உருவாகும். யாழ்ப்பாண வருவாயில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும். வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

**மட்டக்களப்பு**

இப்போது யாழ்ப்பாணத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் அடுத்ததாக மட்டக்களப்புக்கு கொண்டுசெல்லப்படும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பொருளாதரத்தை மீண்டும் கட்டியெழுப்ப நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ஹோட்டல் பாடசாலைகள், சுற்றுலா வழிநடத்தல் வகுப்புக்கள் என்பன ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சகல தரப்பும் ஒத்துழைப்புக்களை வழங்கி அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மட்டக்களப்புக்கும் இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் அந்தப் பகுதியும் அபிவிருத்தியடையும். அதுமட்டும் அல்ல யாழ்ப்பாணம் கொழும்பு, மட்டக்களப்பு கொழும்பு உள்நாட்டு வானூர்தி சேவைகளை உருவாக்க வேண்டும். இதில் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. இதன் மூலமாக உருவாக்கும் பொருளாதார வளர்ச்சி அடுத்த மூன்று ஆண்டுகளில் வடக்கு மக்கள் அனுபவிக்க முடியும்.

**இந்திய ஒத்துழைப்பு**

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் இன்று ஏற்பட்டுள்ளன. அத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்புடன் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக இலங்கை இந்திய வர்த்தக உறவை மேலும் நெருக்கப்படுத்திக்கொள்ள முடியும். இவை அனைத்துமே 2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன மூலமாக உருவாகிய எமது அரசின் மூலமாக நாம் முன்னெடுத்த வேலைத்திட்டங்களாகும். முதலில் மக்களின் நிலங்களை நாம் அவர்களிடம் கொடுக்கும் நடவடிக்கை எடுத்தோம். அதில் இருந்தே அபிவிருத்தி வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. அதற்கும் அப்பால் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம்.

**அடுத்த 5 ஆண்டுகள்**

இன்னும் சிறிது காலத்தில் யாழ்ப்பாணம் பொருளாதார ரீதியில் சிறந்த இடமாக விளங்கும். இப்போது நாம் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் இனிமேல் தீர்வுகள் எதனையும் பெற முடியாது. ஆகவே இந்த அபிவிருத்தியை அடுத்த ஐந்து ஆண்டுகளிலும் நாம் முன்னெடுத்து செல்ல வேண்டும்.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிடம் இரண்டு உலக சாதனைகள் உள்ளன. ஒன்று உலகக்கிண்ணத்தை இலங்கைக்கு கொண்டு வந்தமை. மற்றையது விரைவான பன்னாட்டு வானூர்தி நிலையம் ஒன்றைக் கட்டியமை. இந்த பெருமையும் அவருக்கே சாரும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தது. அத்துடன் இந்திய அரசு மற்றும் இந்தியத் தூதுவர் மூலமும் உதவி கிடைத்தது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்குக்கு இந்தியாவின் பெரிய அளவிலான உதவிகள் கிடைத்தது. தென்னிந்திய இலங்கை உறவுகளும் அதிக நெருக்கமானவை. இப்போது நாம் மேலும் நெருக்கமாக செயற்பட ஆரம்பித்துள்ளோம். தென்னாசியாவின் விரைவான நகரும் நாடாக நாம் மாற என்ன செய்ய வேண்டும் என்பதையே சிந்திக்க வேண்டும். உள்நாட்டு உறவுகளையும் பன்னாட்டு உறவுகளையும் நாம் சரியாக கையாண்டு போர்கள், மோதல்களை தவிர்த்து பயணிக்க வேண்டும் -என்றார்.

இந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உரையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,21)

## கோத்தாவின்...

செய்தியாளர் சந்திப்பில் 13 ஆயிரத்து 784 பேர் சரணடைந்ததாக சரியான எண்ணிக்கையான தகவலைக் கூறுவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக மறுவாழ்வு ஆணையாளர் நாயகம் வழங்கிய தகவலில் 10 ஆயிரத்து 790 சரணடைந்ததாகத் தெரிவித்துள்ளார். இதனால், இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், இராணுவத்தினரிடம் சரணடைந்தமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

'இராணுவத்திடம் சரணடைந்த மக்களுக்கு என்ன நடந்தது?. அவர்கள் எங்கே?' என்ற கேள்விக்கு,

'13 ஆயிரத்து 784 பேர் இராணுவத்திடம் சரணடைந்தனர். மறுவாழ்வு வழங்கி சமூகத்துடன் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டனர். அவர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். மறுவாழ்வுத் திட்டம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதனை வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பாராட்டினர். நாங்கள் எவரையும் தடுத்து வைக்கவில்லை' என்று கோத்தபாய பதிலளித்திருந்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக சரணடைவு தொடர்பான விவரங்களைக் கோரியிருந்தது.

இராணுவத்திடம் இது தொடர்பான தகவல் அறியும் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு இராணுவம், இராணுவத்திடம் புலிகள் சரணடையவில்லை எனவும், அவர்கள் அரசிடமே சரணடைந்தார்கள், என்று பதில் வழங்கியிருந்தது. இது, தொடர்பான தகவல்களை மறுவாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இராணுவம் குறிப்பிட்டிருந்தது.

இதன்படி மறுவாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் வழங்கியிருந்த தகவல்களின்படி இறுதிப் போர்க் காலப்பகுதியில் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி ஒரு நேரத்தில் 10 ஆயிரத்து 790 பேரே சரணடைந்தனரெனத் தெரிவித்துள்ளது.

இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவிக்கும் தொகைக்கும் மறுவாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் குறிப்பிட்டுள்ள தொகைக்கும் பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. (ஒ,5)

## அவன்கார்ட்...

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த போது கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## 25,000...

இந்த நிகழ்வில் ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் தனபாலசிங்கம், வவுனியா பிரதேச செயலர் க.உதயராசா, கிராம அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி அரேபியாவில் பேருந்து விபத்து வெளிநாட்டுப் பயணிகள் 35பேர் சாவு!



ரியாத்,ஒக்.18
சவூதி அரேபியாவின் மதினா நகரில் பேருந்தும் பாரவூர்தியும் மோதிக் கொண்ட விபத்தில் வெளிநாட்டுப்பயணிகள் 35பேர் சாவடைந்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
மதினாவில் இருந்து தனியார் பேருந்து ஒன்று அரபு மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த 35க்கும் மேற்பட்ட பயணிகளுடன் அங்கிருந்து 170 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அல் அகால் எனும் கிராமத்தின் ஹிஜ்ரா வீதியில் பயணித்துக் கொண்டிருந் தது. அப்போது எதிரே வந்த கனரக வாகனமும். பேருந்தும் நேருக்கு நேர் மோதின. மோதிய வேகத்தில் பேருந்து தீப்பிடித்தது.
உள்ளே சிக்கிக்கொண்ட பயணிகள் வெளியே வரமுடியாமல் சாவடைந்தனர்.
சிலர் படுகாயத்துடன் உயிர் தப்பினார்கள். காயமடைந்த 4 பயணிகள் மதினாவில் உள்ள அல் ஹம்மா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


# துருக்கி தாக்குதலை நிறுத்தவேண்டும்

## வலியுறுத்துகிறது சீனா

பீஜிங்,ஒக்.18
சிரியாவில் நடத்தும் இராணுவத் தாக்குதலைத் துருக்கி நிறுத்த வேண்டும் என்று சீனா வலியுறுத்தியது. இது குறித்துச் சீனாவின் அயலுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது:
அனைத்து நாடுகளும் ஐ.நா. சாசனத்தின் நோக்கங்களையும், கொள்கைகளையும், பன்னாட்டு உறவுகளை நிர்வகிக்கும் அடிப்படை விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.
சிரியாவின் வடக்குப் பகுதியில் துருக்கி நடத்தும் தாக்குதலை நிறுத்த வேண்டும். சிரியாவின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும்- என்றார். சிரியாவில் குர்திஷ்கள் மீதான தாக்குதலைத் துருக்கி நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா, ரஷ்யா, ஈரான், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
சிரியா துருக்கி எல்லையை ஒட்டிய சிரியப் பகுதியில் நிலைகொண்டுள்ள குர்திஷ் ஆயுததாரிகளால் தமது எல்லைக்குப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் துருக்கி அதிபர் எர்டோகன் கடந்த வாரம் தெரிவித்தார்.
அங்கிருந்து குர்திஷ் ஆயுததாரிகளுடன் இணைந்து செயற்பட்டு வந்த அமெரிக்காப் படைகளை ட்ரம்ப் திரும்பப் பெற்றவுடன் சிரியாவில் துருக்கி இராணுவம் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றது. துருக்கியின் தாக்குதல் காரணமாகச் சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறியுள்ளனர். இதில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் குழந்தைகள்.

# பிலிப்பைன்சில் நிலநடுக்கம் 5 பேர் சாவு



மணிலா,ஒக்.18
பிலிப்பைன்சின் தெற்கு மாகாணங்களில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக 5 பேர் சாவடைந்தனர். இந்த நிலநடுக்கம் 6.3 ரிக்டர் ஆகப் பதிவாகியது. வடக்குக் கோட பாட்டோ மாகாணத்தின் மகிலாலா நகரில் இருந்து தென்மேற்கில் 23 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கடியில் 2 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நீண்ட நேரம் நிலம் அதிர்ந்து கொண்டே இருந்தது. இதனால் ஏராளமானோர் காயமடைந்தனர். அங்கு மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.


## கூகுள், முகநூல் நிறுவனங்களுக்கு வரி!

# ஐரோப்பிய ஒன்றியம் அதிரடி டொனால்ட் ட்ரம்ப் அதிருப்தி

லண்டன்,ஒக்.18
கூகுள், முகநூல் மற்றும் அமேசன் நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் வரி (டிஜிட்டல்) விதித்தது. இது விரும்பத்தகாதது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அதிருப்தி வெளியிட்டார். அமெரிக்க நிறுவனங்களான இவை இணையதள பரிவர்த்தனைகளுக்கு 3 சதவீத வரி செலுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வரிகளை விதித்தது.
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இத்தாலியும், இந்தப் புதிய வரிக்கு அனுமதி அளித்தது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பிரான்ஸும் இதே வரியை அறிமுகப்படுத்தியது. ஆனால் அமெரிக்கா, பிரான்சுடன் பேச்சுக்களில் ஈடுபட்ட பின்னர் ஒப்பந்த அடிப்படையில் அந்த அந்த வரியை திரும்பச் செலுத்தியது பிரான்ஸ்.
இந்த நிலையிலேயே தற்போது ஐரோப்பிய ஒன்றியம் வரி விதித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த வரி விதிப்புச் செயல் விரும்பத்தகாத ஒன்று என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# மெக்சிக்கோவிலிருந்து நாடு கடத்தப்பட்டனர் இந்தியர்கள் 311 பேர்!

மெக்சிக்கோ சிற்றி, ஒக்.18
உரிய ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாக மெக்சிக்கோவில் தங்கியிருந்த இந்தியாவைச் சேர்ந்த 311பேரை அந்த நாட்டு அரசு இந்தியாவுக்கு நாடு கடத்தியது.
அமெரிக்கா - மெக்சிக்கோ இடையிலான அகதிகள் விவகாரம் தொடர்பாக மெக்சிக்கோ அதிக கவனம் செலுத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையடுத்து அங்கு மெக்சிகோ குடியுரிமைத்துறை அதிகாரிகள் கடும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் அவர்க ளிடம் சிக்கிக்கொண்ட குறித்த இந்தியர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.






# எர்டோகனுக்கு ட்ரம்ப் அனுப்பிய கடிதம் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டதா?

வோஷிங்டன்,ஒக்.18
சிரியா விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், துருக்கி அதிபர் எர்டோகனுக்கு அனுப்பிய கடிதத்தை எர்டோகன் குப்பைத் தொட்டியில் எறிந்ததாகத் துருக்கி அதிபர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ட்ரம்ப் எழுதிய கடிதத்தில், பிரச்சினைக்குரிய ஆளாக இருக்க வேண்டாம், முட்டாள்த் தனமாகவும் செயற்பட வேண்டாம், ஒரு நல்ல ஒப்பந்தத்தை மேற்கொள்வோம்.
ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதற்கு நீங்கள் பொறுப்பாக வேண்டாம், துருக்கியின் பொருளாதாரம் அழிக்கப்படுவதற்கு நானும் பொறுப்பாக விரும்பவில்லை. நீங்கள் இந்த விவகாரத்தில் நேர்மையாகவும், மனிதாபிமானத்துடன் செயற்பட்டால் வரலாறு உங்களை சிறந்தவராகப் பார்க்கும். தீமையைச் செய்தால் அது உங்களை எப்போதும் கொடுங்கோலனாகப் பார்க்கும். என எழுதப்பட்டிருந்தது. சிரியாவில் குர்திஷ்கள் மீது துருக்கி முன்னெடுத்துவருகின்ற போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், துருக்கியின் பொருளாதாரம் அழிக்கப்படும் என ட்ரம்ப் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத் தலைவர் மீது சுத்தியலால் தாக்குதல்!

## ஹொங்கொங்கில் பதற்றம்




ஹொங்கொங்,ஒக்.18

ஹொங்கொங்கின் போராட்டத் தலைவர் ஒருவர் சுத்தியலால் தாக்கப்பட்டார். படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொது மனித உரிமை முன்னணி என்ற குழுவின் தலைவரான ஜிம்மி ஷாம் என்கிற இவர் சுத்தியலால் சராமாரியாகத் தாக்கப்பட்டுக் குருதி வெள்ளத்தில் வீதியில் விழுந்து கிடந்தார். நாடாளுமன்றில் போராட்டக்காரர்கள் இடையூறு செய்ததால், இந்த ஆண்டுக்கான கூட்ட உரையை ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லொம் நிறுத்தியதன் பின்னர் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

சுத்தியல்களோடு வந்த ஐந்து ஆண்கள், ஜிம்மி ஷாமைத் தலையில் தாக்கியதாகப் பொது மனித உரிமை முன்னணி தெரிவித்தது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, சுய நினைவோடு இருந்த அவரது உடல் நிலை, இப்போது கவலைக்கிடமாக இருப்பதாகவும் அது மேலும் கூறியது. ஹொங்கொங்கில் போராட்டங்கள் தொடங்கிய பின்னர், ஜிம்மி ஷாம் தாக்கப்பட்டிருப்பது இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கும் நபர்களைச் சீனாவுக்கு நாடுகடத்துவதான தீர்மானத்தைக் ஹொங்கொங் நிர்வாகம் கொண்டுவந்தது. அதற்கு எதிராகக் கடந்த ஜூன் மாதம் அங்கு போராட்டம் தொடங்கியது. போராட்டத்தையடுத்துக் குறித்த தீர்மானம் கைவிடப்பட்டதாகத் தெரிவித்தார் கோரி லொம். ஆனாலும் போராட்டக்காரர்கள் முழுமையான ஜனநாயகம் கோரியும், பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியும் போராடிவருகின்றனர்.

# புதிய 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் உருவாக்கம்!



லண்டன்,ஒக்.18

பிரிட்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் புதிய 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டார் பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன். இதுதொடர்பாகத் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், நம்மிடம் மீண்டும் கட்டுப்பாடு வரும் வகையில் ஒரு புதிய ஒப்பந்தம் கிடைத்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனின் எதிர்க் கட்சியான தொழிற்கட்சியின் தலைவர் ஜெரிமி கோர்பின் இதுதொடர்பாகக் கூறுகையில், முன்னாள் தலைமை அமைச்சர் தெரேசா மே கலந்து பேசி முடிவெடுத்த ஒப்பந்தத்தை விட இது மிகவும் மோசமானது. இதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என்றார்.

இவ்வாறு இருக்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரான ஜீன் கிளாட் ஜங்கர், இது நியாயமான மற்றும் இரண்டு தரப்புகளுக்கும் சமமான ஒப்பந்தம் என்று குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



ஹொங்கொங் நிர்வாகி கேரி லொம் இந்த வருடத்துக்கான தனது கொள்கை உரையை வழங்க வரும்போது, ஹொங்கொங் சட்டமன்றக் குழுவில் உள்ள போராட்டக்காரர்களுக்கு ஆதரவளிக்கின்ற நபர்கள் கோரி லொமுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நல்ல செயலை சிலர் குறை சொல்வர். பெருந்தன்மையுடன் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிகம் பணி புரிய வேண்டும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**இடபம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உள்ள இடையூறு விலகும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும். விருந்து, விழாவில்கலந்துகொள்வீர்கள்.

**மிதுனம்:** இடையூறு செய்தவரை சந்திக்க நேரிடலாம். சொந்த பணியில் ஆர்வம் கொள்வது நல்லது. அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம். தியானம்; தெய்வ வழிபாடு

**கடகம்:** நண்பரின் வழிகாட்டுதல் கிடைக்கும். புதிய இலக்கை நோக்கி நடைபோடுவீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

**சிம்மம்:** சிறுசெயல்கூட அதிகநன்மையை தரும். உறவினர்செய்தஉதவிக்குமறுஉதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபார தொடர்பு பலம் பெறும். நிலுவை பணம் வசூலாகும்.

**கன்னி:** முக்கியமான பணி நிறைவேற தாமதமாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம் அதிருப்தியுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணவரவை சிக்கனமாக பயன்படுத்துவது நல்லது.

**துலாம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. அதிக உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் பேச்சில் கலகலப்பு மிகுந்திருக்கும். மற்றவரின்கவனம்உங்கள் பக்கம் திரும்பும். தனி திறமையினால் தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் அடைவீர்கள். ஆதாயபணவரவுகிடைக்கும்.

**தனுசு:** எதிர்கால திட்டம் குறித்து நண்பரிடம் பேசுவீர்கள். இடையூறு விலகி புதிய வழி பிறக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மகரம்:** சுற்றுப்புற சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்கால வாழ்வில் அக்கறை கொள்வீர்கள். வருகிற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்த வேண்டும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**மீனம்:** உங்களின் பேச்சில் கவித்துவம் நிறைந்திருக்கும். நண்பரின் உதவியால் பெருமிதம் கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.18
மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் கால்ப்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஒக்.18
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

யாழ்ப்பாணம், ஒக்.18
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை யாப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.
இதில் மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து றப்ரஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்த விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.எஸி.எஸி.எஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)




பளுதூக்கல் போட்டியில்

# ஆசிகாவுக்கு தங்கப் பதக்கம்

### சிறந்த வீராங்கனையாவும் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.18
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி வி. ஆசிகா தங்க பதக்கம் வென்றதுடன் அனைத்து பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனையாகவும் தெரிவானார்.
பொலநறுவை றோயல் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 64 கிலோ எடைப் பிரிவில் 170 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றதுடன் அனைத்துப் பெண்கள் பிரிவில் சிறந்த வீராங்கனை யாகவும் தெரிவானார். (23)

## ஜெசினுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம்,ஒக்.18
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் க.ஜெசின் வெண்கலப் பதக்கம் வென்றார்.
பொலநறுவை றோயல் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 89 கிலோ எடைப் பிரிவில் 120 கிலோ எடை தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். (23)

## கொக்குவில் இந்துவுக்கு வெள்ளிப் பதக்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.18
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் கொக்குவில்இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.மனோசன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
பொலநறுவை றோயல் மத்திய கல்லூரியில் இடம் பெற்ற ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 102 கிலோ எடைப் பிரிவில் 197 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார். (23)

## நிதுஷாவுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம்,ஒக்.18
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சூரியகுமார் நிதுஷா வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.
இந்தப் போட்டி பொலநறுவை ராஜகிரிய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் 17 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் 64 கிலோ எடைப் பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சூரியகுமார் நிதுஷா சினெச் முறையில் 33 கிலோ பளுவையும் கிளின் அன் ஜக் முறையில் 40 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 73 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (422)



## வயாவிளான் மத்திய கல்லூரிக்கு ஓர் தங்கம், 2 வெள்ளி பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.18
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி நிதுர்சனா தங்கப் பதக்கத்தையும், அபிசாக்,தனுசியா ஆகியோர் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
பொலநறுவை றோயல் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கு போட்டியில் நிதுர்சனா 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் 55 கிலோ எடைப் பிரிவில் 125 கிலோ எடையைத் தூக்கி தங்கப் பதக்கம் வென்றார்.
இதே பிரிவில் அபிசாக் 49 கிலோ எடைப் பிரிவில் 106 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும், தனுசியா 71 கிலோ எடைப் பிரிவில் 120 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

கராத்தே போட்டியில்

## ஜெய் கொல்டன் சோட்டக்கன் கராத்தே அசோசியேஷ மாணவர்கள் பதக்க வேட்டை



யாழ்ப்பாணம், ஒக்.18
இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் ஜெய் கொல்டன் சோட்டக்கன் கராத்தே அசோசியேஷ மாணவர்கள் 3 தங்கப் பதக்கம் 3வெள்ளிப் பதக்கம் 3வெண்கலப் பதக்கம் உட்பட 9 பதக்கங்கள் பெற்றுக்கொண்டனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீருவில் இளைஞர் வி.க. அரையிறுதிக்குள் நுழைவு

யாழ்ப்பாணம், ஒக்.18
வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வல்வைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நத்தும், அணிக்கு 9 வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுத் தொடரில் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

நேற்று முன்தினம் தீருவில் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை ஒற்றுமை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. ஆட்ட நாயகனாக தீருவில் அணியின் சிவகரன் தெரிவானார். (23)




# கலைமதி வி.க.அணி கிண்ணம் வென்றது

யாழ்பாணம்,ஒக்.18
55ஆவது இராணுவ படைப் பிரிவினர் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் இரு அணிகளம் தலா மூன்று கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்ப தற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (23)

# கராத்தே போட்டியில் கஜவிந்துக்கு தங்கம்

யாழ்ப்பாணம் ஒக்.18
இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் உயரப்புலம் மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலய மாணவன் யு.கஜவிந் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் 12 வயதுப் பிரிவுஆண்களுக்கான 10,9,8,கியூபிரிவு,குமித்தே போட்டியில் யு.கஜவிந் தங்கப் பதக்கத்தையும், காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (23)



# கோபத்தில் மணிக்கட்டை உடைத்த மார்கிராம்

தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மார்கிராம், தோல்வியின் விரக்தியில் மணிக்கட்டை உடைத்துக் கொண்டதால் 3ஆவது டெஸ்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்கா அணி சார்பில் மார்கிராம் ஆரம்ப வீரராகக் களம் இறங்கினார். இவர் முதலாவது டெஸ்ட் போட்டியில் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

2ஆவது டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்சிலும் டக்அவுட் ஆனார். இதனால் விரக்தியடைந்த அவர், திடப்பொருள் மீது கோபத்தில் குத்தியதாக தெரிய வருகின்றது. இதில் அவரது மணிக்கட்டு எலும்புப் பகுதியில் முறிவு ஏற்பட்டது.

3ஆவது டெஸ்ட் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் அவரது காயம் குணம் அடைய வாய்ப்பு இல்லை என்பதால் 3ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.



# ரைக் கொண்டோ போட்டியில் முல்லை மாணவர்கள் பதக்கம்

யாழ்ப்பாணம், ஓக.18
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான ரைக் கொண்டோ போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவன் கே.சுபேந்திரன் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.



கண்டி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஆண்களுக்கான ரைக் கொண்டோ போட்டியில் 80-87 கிலோ எடைப் பிரிவில் அவர் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

பெண்களுக்கான ரைக் கொண்டோ போட்டியில் செம்மலை மகா வித்தியாலய மாணவி எம். லோஜி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

பெண்களுக்கான ரைக் கொண்டோ போட்டியில் 46-49 கிலோ எடைப் பிரிவு எம்.லோஜி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (23)

# பாடும்மீன் - யூனியன் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக்.18
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தாத்தன், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரும் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் தலைவருமான இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)


ஆனைக்கோட்டை யூனியன் வி.க.


குருநகர் பாடும்மீன் வி.க.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 இலங்கை அணி அறிவிப்பு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் ரி-20 தொடரில் மோதவுள்ள 16 பேர் கொண்ட குழாமை இலங்கை கிரிக்கெட் சபை நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

லசித் மலிங்க தலைமையிலான இந்தக் குழாமில் குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக்க, அவிஷ்க பெர்னாண்டோ, நிரோஷன் திக்வெல்ல, தசுன் சானக்க, செஹான் ஜெயசூரிய, பானுக்க ராஜபக்ஷ, ஓசாத பெர்னாண்டோ, வசிந்து ஹசரங்க, லக்ஷான் சந்தகன், நுவான் பிரதீப், லஹிரு குமார, இசுரு உதான, லஹிரு உதான, மற்றும் கசூன் ராஜித ஆகிய வீரர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூதாட்டத்தில் சிக்கினார்கள் ஐ. அரபு எமிரேட்ஸ் வீரர்கள்

சூதாட்டச் சர்ச்சையில் சிக்கிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் கிரிக்கெட் அணித் தலைவர் உட்பட 3 வீரர்கள் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.



2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாவுள்ள ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தகுதி சுற்றுப் போட்டிகள், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இன்று ஆரம்பமாகின்றது.

இதில் 14 அணிகள் பங்கேற்கின்றன. அதில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி, சூதாட்டச் சர்ச்சையில் சிக்கியுள்ளது. அணியின் தலைவர் மொஹட் நவீத், ஷாய்மன் அன்வர், கதீர் அஹமட் ஆகியோர் ஊழல் குற்றச்சாட்டின் பேரிலே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

**SLAS**
Open/Limited
வகுப்பு
சனி (19/10)
9.00 am - 3.30pm
வளவாளர்
த.தவசேகர்
சத்தியமூர்த்தி
கருணதாஸ்
**SLACS**
வகுப்பு
சனி, ஞாயிறு
9.00-4.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
யாழ்நகர்

**வேலையாள்கள் தேவை**
நெல்லியடியில் உள்ள
புடைவை கடை, பான்சி கடை, **Beauty Parlour** இற்கு
பெண் உதவியாளர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(CS/28751) (11,17)
077 813 7709

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணத்தில் உள்ள
பிரபல தனியார் நிறுவனத்திற்கு
**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்** தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் கீழ்காணும் முகவரிக்கு இன்றும் (18.10.2019 வெள்ளிக்கிழமை). நாளையும் (19.10.2019 சனிக்கிழமை) காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நேரில் சமுகம் தரவும்.



**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241

**V2 Travels**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**SLAS**
**Open & Limited**
உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 24
பொது அறிவு
(இலங்கை & உலகம்
S.அன்ரன்பெரேரா
19.10.2019 சனி
9.00 am - 5.00 Pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK இலவச நூல் பெற்றுக்கொள்ளலாம்.
**NEC** மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143

**SLAS**
**Open & Limited**
உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 25
உமாசங்கர்
விடய ஆயவு - சிவராசா
20/10/2019 ஞாயிறு
9am- 5.00 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK இலவச நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
076 166 1986, 077 741 7143

அமெரிக்க

# குத்துச்சண்டை வீரர் பேட்ரிக் டே சாவு


குத்துச்சண்டை போட்டியின் போது மூளை அதிர்ச்சியால் பாதிப்படைந்த அமெரிக்க வீரர் பேட்ரிக் டே உயிரிழந்தார்.

அமெரிக்காவின் சிகாகோ மாநிலத்தில் யு.எஸ்.பி.ஏ. குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றன. இதில் நடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் நியூயோர்க்கைச் சேர்ந்த முன்னாள் சம்பியன் பேட்ரிக் டேவும், ஒகியோ மாநிலத்தைச் சேர்ந்த ஒலிம்பிக் சம்பியனான கான்வெல்லும் மோதினர்.

போட்டியின் 10ஆவது சுற்றில், இருவரும் மோதிக் கொண்ட போது திடீரென பேட்ரிக் மயங்கி கீழே விழுந்தார். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பேட்ரிக் மூளை அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். நான்கு நாட்களாக கோமாவில் இருந்த பேட்ரிக் டே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

பேட்ரிக் மரணமடைந்த செய்தியை, பேட்ரிக் டே மற்றும் கான்வெல் இருவரது விளம்பரதாரரான லூ டிபெல்லா அறிவித்தார்.

நடப்பு வருடத்தில் மட்டும் உலக அளவிலான குத்துச்சண்டைப் போட்டியில், போட்டி மைதான வளையத்துக்குள், 3குத்துச்சண்டைவீரர்கள்இந்த மூளை அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.






## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சயனொளிபவன்



இல.165, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மணல் தரை ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சயனொளிபவன் நேற்று (17.10.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் சுகிர்தராணியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் முகுந்தனின் (முதுநிலை விரிவுரையாளர், இந்துக் கற்கைகள் பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) அன்புத் தந்தையாரும் சுதாவின் (ஆசிரியை - பாசையூர் அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயம்) அன்பு மாமனாரும் சம்யுக்தா, ஹர்ஷவர்த்தனன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரா (இளைப்பாறிய சிரேஷ்ட பொறியியலாளர்), பத்மலோசனி மற்றும் இரவீந்திரநாத் (கால்நடை வைத்தியர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ச . முகுந்தன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org